13.08.2015

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## கண்மாய் கெழுத்தி வரத்து அதிகம்

சிவகங்கை:சிவகங்கை கண்மாய்களில் பிடித்த 'கண்மாய் கெழுத்தி' மீன் வரத்து அதிகரித்துள்ளது.தமிழகத்தில் செங்கல்பட்டுக்கு அடுத்து அதிக கண்மாய், ஊரணி நிறைந்த மாவட்டம் சிவகங்கை. இங்கு, சிறு ஊரணி, சிறு கண்மாய், பாசன கண்மாய் என 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கண்மாய்கள் உள்ளன. கோடையில் பெய்த மழைநீர் கண்மாய்களில் தேங்கியிருந்தது. இதில், அதிகளவில் 'கண்மாய் கெழுத்தி' மீன்கள் வளர்ந்திருந்தன. தற்போது, கண்மாய்களில் நீர் வற்றுவதால் கிராமத்தினர் இங்கு வளர்ந்துள்ள கெழுத்தி மீன்களை பிடித்து வருகின்றனர். இவற்றை மீன் வியாபாரிகள் வாங்கி சந்தையில் விற்று வருகின்றனர்.கிலோ ரூ.600: 'கண்மாய் கெழுத்தி' மீன்களுக்கு சிவகங்கை மட்டுமின்றி பிற மாவட்டங்களிலும் வரவேற்பு அதிகம். இந்த மீன்கள் கிலோ ரூ.600க்கு மார்க்கெட்களில் நேற்று விற்பனை செய்யப்பட்டன. உயிரோடு இருந்தால் மட்டுமே இந்த மீன் விலை அதிகமாக இருக்கும். சிவகங்கை மீன் வியாபாரி ஜபரூல்லா கூறுகையில்,“ சிவகங்கை கண்மாய்களில் வளரும் 'கெழுத்தி' மீன்களுக்கு சுவை அதிகம். தற்போது கண்மாயில் நீர் வற்றி வருவதால், மீன்களை பிடித்து விற்கின்றனர். மதுரை போன்ற பெருநகர ஓட்டல்களில் விரால், அயிரை மீன், கெழுத்தி மீன்கள் அதிகம் சமைக்கப்படுவதால், கெழுத்தி மீன்களுக்கு கிராக்கி அதிகம்,” என்றார்.

## மரம் காய்கிறதா: தடுக்க என்ன செய்யலாம்



நமது மாந்தோட்டங்களில் சில மரங்களின் கிளைகள் காயலாம். அதற்கு முக்கிய காரணம், மா மரத்தில் வண்டு தாக்குதல் தான். இந்த வண்டு சுமார் 6 செ.மீ., நீளத்தில் நீண்ட இரு கொம்புகளைக் கொண்டிருக்கும். இந்த வண்டுகள் மரத்தின் மேல்பட்டைகளில் உட்கார்ந்து முட்டையிட்டு மடியும்.

முட்டைகள் பொரித்து புழுக்கள் வெளிவந்து மா மரத்து பட்டையின் உட்பாகத்தைத் துளைத்துத் தின்னும். தண்டுப் பகுதியை உண்பதால் கிளைகளும் சில நேரங்களில் முழுமரமும் வாழ பின்பு காய்ந்து விடும். இதன் தாக்குதலை அறிய மரத்தின் அடியில் கூர்ந்து பார்த்தால் கழிவுகள் அடையாக கிடப்பதைக் காணலாம். கழிவுகள் கறுப்பு நிற குருணை போன்ற துகள்களாக உள்ள இடத்தில், பட்டைகளை லேசாகத் தட்டினால் "மொத்து...மொத்து' என்று சத்தம் கேட்பதை அறியலாம். எனவே திடீரென்று மா மரக்கிளைகளோ அல்லது கொம்புகளோ காய ஆரம்பித்தால் மரத்தில் வண்டு விழுந்துள்ளது என்பதை அறியலாம். தாக்கப்பட்ட மரங்களில் தரை மட்டத்திலிருந்து சுமார் 60 முதல் 90 செ.மீ., உயரத்தில் தலைகீழான "ப' வடிவத்தில் மரத்தின் பட்டையை ஒரு உளி கொண்டு லேசாக செதுக்கி நீக்க வேண்டும். இதன் இடையில் சிறிது நனையும் பஞ்சு வைக்கவும்.

அதில் "மானோக்ரோட்டாபாஸ்' மருந்து 10 மி.மீ., மருந்தை, பஞ்சு நன்கு நனையும் வரை சொட்டு சொட்டாக இட்டு பின்பு பட்டையை மரத்தோடு பொருத்தி, ஒரு நூலினால் கட்டி பின்பு வெட்டப்பட்ட பாகத்தை களிமண்

பசையினால் பூசி விட வேண்டும். இதனால் தண்டு மற்றும் கிளைகளில் இருக்கும் புழுக்கள் இறந்துவிடும்.

மரத்தின் தண்டுப் பகுதியில் ஓட்டை பெரிதாக தெரியுமானால் அதில் 5 கிராம் "கார்போப்யூரான்' குருணையை போட்டு, பின்பு களிமண்ணால் மூடிவிடவும். குருணை மருந்தில் வரும் விஷ வாயு பூச்சிகளை கொன்றுவிடும்.

உரிய பாதுகாப்பு மேற்கொள்வதுடன் நன்றாக மரம் வளர மண்புழு உரம் 45 நாட்களுக்கு ஒரு முறை இட்டும் வேப்பம்புண்ணாக்கு 500 கிராம் பயன்படுத்தியும் ஆண்டுதோறும் பயனற்ற கிளைகளை ஆகஸ்ட் முதல் செப்டம்பர் மாதங்களில் கவாத்து மேற்கொண்டு 5 ஆண்டுக்கு மேற்பட்ட மரங்களில் உற்பத்தி திறன் அதிகரிக்க செய்யலாம். குறிப்பாக மா மரத்தில் குறுக்கும், நெடுக்குமாக உள்ள கிளைகளை நறுக்கவும். ஒன்றுக்குள் ஒன்றாக செல்லும் கிளைகளையும், நோய் விழுந்த மற்றும் இறந்த கிளைகளை வெட்ட செயின் ரம்பம் பயன்படுத்தி வெட்டப்பட்ட பகுதியில் "போக்டோ பேஸ்ட்' பூச வேண்டும். இதனால் கிளைகள் சீரமைக்கப்பட்டு சூரிய ஒளி மரத்தின் கிளைப் பரப்பு முழுவதும் உட்சென்று மரத்தின் செயல்பாடு அதிகரித்து மரங்கள் நன்கு பூத்து காய் பிடிப்பு அதிகரிக்க வாய்ப்பு உள்ளது.

ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு உத்திகள், ஒருங்கிணைந்த உர நிர்வாகம், ஊடு பயிர் சாகுபடி, மண் வளம் பேணுதல், நீர் நிர்வாகம், அடர் நடவு முறை, இயற்கை வேளாண்மை உத்திகள், தரம் பேணுதல் ஏற்றுமதிக்கு ஏற்பாடு செய்தல் மற்றும் மதிப்புக்கூட்ட விவசாய உற்பத்தி நிறுவன அமைப்பு ஏற்படுத்திடல் முதலிய உத்திகளையும் கையாள வேண்டும். மேலும் விபரம் பெற 98420 07125 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.-**இளங்கோவன் தோட்டக்கலை உதவி இயக்குனர்**

## தமிழ்நாடு அரசின் வேளாண் பொறியியல் துறையின் மானிய உதவித் திட்டங்கள்

தமிழ்நாடு வேளாண்மை பொறியியல் துறையின் சீர்மிகு திட்டங்களாவன: சிறுபாசனத் திட்டம் : சென்னை, நீலகிரி, கன்னியாகுமரி தவிர 29 மாவட்டங்களில் நடைமுறைப்படுத்தப்படுகிறது. குழாய் கிணறுகள் அமைத்தல், திறந்தவெளிக் கிணறுகள் அமைத்தல், வறண்ட கிணறுகளில் போர் போடுதல் போன்ற பணிகளுக்கு உதவுகிறது. பெர்கூசன் துளைக்கருவி, பாறை தகர்க்கும் கருவி, நீர்துளைக் கருவி போன்ற பலவகைக் கருவிகளைக் குறைந்த வாடகைக்குத் தருகிறது.

நில மேம்பாட்டுத் திட்டம் : சென்னை, கன்னியாகுமரி நீங்கலாக 30 மாவட்டங்களில் நடைமுறைப்படுத்தப்படுகிறது. நிலம் சமன்படுத்துதல், வடிவமைத்தல், விவசாய உற்பத்தித் திறன் அதிகரித்தல், பண்ணை சக்தியை உருவாக்குதல், உழுதல், பரம்படித்தல் கருவிகள் மூலம் அறுவடை செய்ய விவசாயிகளுக்கு குறைந்த வாடகையில் கருவிகள் வழங்குதல். புல்டோசர், டிராக்டர், அறுவடை, நாற்றுநடுதல், மண் அள்ளும் கருவிகள் குறைந்த வாடகைக்கு வழங்கப்படும். தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாடு திட்டம் : திருந்திய தரிசு நில மேம்பாட்டு திட்டத்தில் நிலமற்ற ஏழை விவசாய தொழிலாளர் குடும்பங்களுக்கு அரசு தரிசு நிலம் வழங்குதல். வேளாண்மை பயிர் தொகுப்பு நில மேம்பாட்டு மானியத்தொகை வழங்கப்படும். ஏக்கருக்கு : நில சீரமைப்புக்கு தொகை ரூ.3,400, ஆழ்துளைக் கிணறு அமைக்க ரூ.8,900, சொட்டு நீர் / உரப்பாசனம் ரூ.32,000, சமுதாய நாற்றங்கால் அமைப்பு ரூ.2,000, விதைகள் மற்றும் கன்றுகள் ரூ.2,000, நீர்க்கரைசல் உரங்கள் ரூ.6,000, பயிர் பாதுகாப்பு மருந்துகள் ரூ.2,000. முதல் திட்டத்திற்கு : மாவட்ட பொறியாளர் / மண்டல தலைமை

பொறியாளர் /அல்லது வேளாண்மை பொறியியல் துறை, தமிழ்நாடு அரசு, அண்ணாசாலை, நந்தனம், சென்னை-35. அலைபேசி: 044- 2436 2686.

இரண்டாம் திட்டத்திற்கு : மாவட்ட ஆட்சியர், மாவட்ட இணை இயக்குனர் (வேளாண் மற்றும் மாவட்ட நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை).- **ஜி.சந்திரகாந்தாதொழில் முனைவோரின் ஆலோசகர், 93807 55629, 99624 76415**

## சின்ன சின்ன செய்திகள்



எள் சாகுபடி நுட்பங்கள்: ஆடிப்பட்டம் தேடிவிதை என்பது பழமொழி. சாகுபடிக்கு ஏற்ற வறட்சியைத் தாங்கி வளரக் கூடிய, பூச்சி நோய்களுக்கு எதிர்ப்புத்தன்மை கொண்ட இரகங்கள் அனைத்தும் 80 முதல் 85 நாட்கள் வயதுடையவை. மானாவாரியில் ஒரு எக்டருக்கு 600 முதல் 750 கிலோ வரை விளைச்சலை தரவல்லது.

எள் சாகுபடிக்கு சான்று பெற்ற விதைகளையே உபயோகிக்க வேண்டும். இனத்தூய்மையுள்ள நன்கு திரட்சியான விதைகளே சிறந்தது. சுமார் 90 சதவீதம் முளைப்புத்திறன் உள்ள விதைகளையே உபயோகிக்க வேண்டும். இரண்டு கிலோ விதைக்கு 4 கிராம் திரம் அல்லது கார்பன்டாசிம் என்ற அளவில் மருந்தைக் கலந்து 24 மணி நேரம் கழித்து விதைக்க வேண்டும். அல்லது 1 கிலோ விதைக்கு 4 கிராம்

டிரைகோடெர்மா என்ற அளவில் விதை நேர்த்தி செய்து விதைக்கலாம். தழைச்சத்து (25%) 3 பாக்கெட் அசோஸ்பைரில்லம் (600 கிராம் / எக்டர்), 3 பாக்கெட் (600 கிராம் / எக்டர்) பாஸ்போ பாக்டீரியா அல்லது 6 பாக்கெட் அசோபாஸ் (1200 கிராம் / எக்டர்) மூலம் விதை நேர்த்தி செய்வதன் மூலம் பயிருக்கு கிடைக்கின்றது. எள்ளுக்கு "ஏழு உழவு' என்பது பழமொழி. எனவே 5 முறையாவது நன்கு புழுதிட உழுது, நிலத்தை சீர்செய்ய வேண்டும்.

கோ.1, பையூர் 1 விஆர்ஐ (எஸ்.வி) 2 மற்றும் டிஎம்வி. (எஸ்.வி) 7 ஆகிய விதைகளைப் பயன்படுத்தலாம். இறவையில் சாகுபடி செய்ய 10 முதல் 20 சதுர மீட்டர் பரப்பில் பாத்திகள் அமைத்து விதைக்க வேண்டும். விதைக்கும் முன் 5 கிலோ விதையுடன் 20 கிலோ மணல் கலந்து நிலத்தின் மேல் சீராகத் தூவ வேண்டும். விதைத்த 30வது நாளில் ஒரு அடி இடைவெளி விட்டு பயிரை களைக்க வேண்டும்.மானாவாரியில் தழை, மணி, சாம்பல் சத்துக்களை எக்டருக்கு 23:13:13 கிலோ என்ற அளவில் இட வேண்டும். இறவைப் பயிருக்கு எக்டருக்கு 30:23:23 கிலோ என்ற அளவில் அடியுரமாக இடவேண்டும். மாங்கனீசு சல்பேட் நுண்ணூட்டத்தின் ஏக்கருக்கு 2 கிலோ என்ற அளவில் 20 கிலோ மணலுடன் கலந்து நிலத்தில் சீராகத் தூவி விட வேண்டும். களைகளைக் கட்டுப்படுத்த "ப்ளூக்ளோரலின்' அல்லது பென்டிமீத்தாலின் எக்டருக்கு 2 லிட்டர் வீதம் 500 லிட்டர் தண்ணீரில் கலந்து கைத்தெளிப்பானால் தெளித்தப் பின் நீர் பாய்ச்ச வேண்டும்.

மக்காச்சோளத்தில் நுண்ணூட்டச்சத்து பற்றாக்குறை : இவைகளில் துத்தநாகம் மற்றும் மக்னீசியம் குறைபாடுகள் அதிகளவில் காணப்படும். துத்தநாக குறைபாட்டால் பயிரின் இனங்குருத்துக்கள் வெளிறி காணப்படும். முதிர்ந்த இலையின் நரம்புகளுக்கு இடையில் மஞ்சள்இலைகள் காணப்படும். இந்தக் குறையைப் போக்க ஏக்கருக்கு 8

கிலோ துத்தநாக சல்பேட் சத்தை அடியுரமாக இடவேண்டும். பயிர்களில் மக்னீசியம் குறைபாடு காணப்பட்டால் அடி இலைகளின் விளிம்புகளுக்கும், நரம்புகளுக்கும் இடையே வெளிறிக் காணப்படும். இரும்புச்சத்து பற்றாக்குறையால் பயிர் முழுவதும் வெளிறியது போல் காணப்படும். இக்குறைகளைப் போக்க நுண்ணூட்டக் கலவையை ஏக்கருக்கு 3 கிலோ அளவில் 20 கிலோ மணலுடன் கலந்து விதைத்தவுடன் மேலாகத் தூவி விட வேண்டும். பயிரின் 50 சதவீதம் பூக்கும் பருவத்தில் 0.5 சதம் துத்தநாக சல்பேட் மற்றும் 0.2 சதம் பேளிக் அமில கரைசலைத் தெளிப்பதன் மூலம் விதைப்பிடிப்பு மேம்படும். அல்லது 0.5 சதம் அக்ரோமின் நுண்ணூட்ட சத்தை பெண் பூ பூக்கும் பருவம் மற்றும் விதை முதிர்ச்சி பருவத்தில் தெளிக்க வேண்டும். பெண் பூ பூக்கும் பருவம் மற்றும் விதைகள் முதிரத் தொடங்கும் பருவம் 0.5 சதம் நியூட்ரிகோல்டு தெளித்தல் அல்லது 5 சதம் முளையிட்ட தட்டைப்பயிறு பால் தெளிக்க வேண்டும். ஆண்டுக்கு இரண்டு முறை காய்க்கும் பாலூர்-1 பலா : தமிழ்நாட்டில் 4 ஆயிரத்து 500 எக்டரில் பலா சாகுபடியாகிறது. "பண்ருட்டி' பலா என்று தனியாக ரகம் கிடையாது. பண்ருட்டி பலா சிறப்பாக இருப்பதற்கு காரணம் செம்மண் அதிகமான வெப்பம் கடல் காற்றின் ஈரப்பதம் ஆகியவை தான். இந்தப்பகுதியில் கிடைக்கும் மகசூல் அளவு, சுளைகளின் அளவு, சுவை போன்றவை மற்ற பகுதிகளை விட மாறுபட்டவை. தவிர இப்பகுதி மரங்களில் 5 முதல் 7 ஆண்டுகள் கழித்துத் தான் மகசூல் கிடைக்கிறது. பாலூர் காய்கறி ஆராய்ச்சி நிலையத்தில் ஆய்வுகள் மேற்கொண்டதில் 3 ஆண்டுகளில் காய்க்கும் பாலூர்-1 மற்றும் பாலூர்-2 ஆகிய ரகங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. பாலூர்-1 ஆண்டுக்கு 2 முறையும், பாலூர்-2 ஆண்டுக்கு ஒரு முறையும் காய்க்கும். 8 முதல் 9 ஆண்டுகளுக்குப் பிறகு சராசரியாக ஒவ்வொரு மரத்தில் இருந்தும் 100

காய்கள் அறுவடை செய்யலாம். செடிகள் தேவைப்படுவோர் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி : முனைவர் அனிசா ராணி, தொலைபேசி- 97889 28254, பேராசிரியர் மற்றும் தலைவர், காய்கறி ஆராய்ச்சி நிலையம், பாலூர், கடலூர் மாவட்டம்.

## விவசாயிகளுக்கு 'ஆர்கானிக்' சான்றிதழ்:வேளாண் இயக்குனர் ராமமூர்த்தி தகவல்

புதுச்சேரி:'இயற்கை முறையில் விவசாயம் செய்யும் விவசாயிகளுக்கு, 'ஆர்கானிக்' சான்றிதழ் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது' என, வேளாண் இயக்குனர் ராமமூர்த்தி தெரிவித்தார்.வேளாண் துறை ஆத்மா திட்டத்தின் கீழ் இயற்கை வேளாண்மை, பாரம்பரிய நெல் ரகங்கள் சாகுபடி குறித்த கருத்தரங்கம் மற்றும் ஆத்மா குழுக்களுக்கு பண்ணை இயந்திரம் வழங்கும் விழா தட்டாஞ்சாவடி வேளாண் துறை அலுவலத்தில் நடந்தது.விழாவில், வேளாண் துறை இயக்குநர் ராமமூர்த்தி பேசியதாவது:முன்னோர் காலம் காலமாக பயிரிட்டு வந்த பாரம்பரிய நெல் ரகங்கள் சாகுபடி பரப்பு, நாளடைவில் குறைந்து விட்டது. பாரம்பரிய நெல் ரகங்கள் இயற்கை சீற்றங்களை தாங்கி வளர்வதோடு, மருத்துவ குணங்களை கொண்டது. கம்பு, கேழ்வரகு, சாமை, சோளம், திணை உள்ளிட்ட பாரம்பரிய பயிர்களுக்கு, அதிக வரவேற்பு உள்ளதால், சந்தைப்படுத்தும் வாய்ப்பு அதிகரித்துள்ளது.புதுச்சேரியில் விவசாய நிலங்கள் குறைந்தாலும், நெல் உற்பத்தி குறையவில்லை. இயற்கை விவசாயம் மூலம் பயிரிடப்படும் காய்கறிகளுக்கு அதிக வரவேற்பு உள்ளது.இயற்கை முறையில் பயிரிடப்பட்ட காய்கறிகள் தான் என்பதற்கு, அங்கீகாரம் பெற வேண்டும். அதற்கு கடந்த காலத்தில் தமிழகத்தை நம்பியே இருந்தோம். வரும் ஆண்டில், புதுச்சேரி வேளாண் துறையின் மூலம், ஆர்கானிக் சான்றிதழ் வழங்குவதற்கான ஏற்பாடு நடந்து வருகிறது.

இயற்கை முறையில் பயிரிடப்படும் முருங்கை 1 கிலோ ரூ. 20 முதல் ரூ. 100 வரை விற்பனை செய்யப்படுகிறது. வெளிநாட்டில் ஒரு கிலோ ரூ. 2,400 ரூபாய்க்கு விற்பனையாகிறது. வெள்ளரிக்காய், பாகல் உள்ளிட்ட காய்கறிகளுக்கும் வெளிநாட்டில் டிமாண்ட் அதிகம். ஆனால், அவை இயற்கை முறையில் உற்பத்தி செய்யப்பட்டது என சான்றிதழ் அவசியம்.இவ்வாறு அவர் பேசினார்.

## திருந்திய நெல் சாகுபடிக்கு ரூ.6,000 மானியம்

திருவள்ளூர்:திருந்திய நெல் சாகுபடியில் ஈடுபடும் விவசாயிகளுக்கு, 4.94 ஏக்கர், 6,000 ரூபாய் மானியம் வழங்கப்படும் என, வேளாண் உதவி இயக்குனர் எபினேசன் தெரிவித்து உள்ளார். இதுகுறித்து, அவர் கூறியதாவது:திருவள்ளூர் ஒன்றியத்தில், 9,880 ஏக்கர் பரப்பளவில், சம்பா நெல் சாகுபடி செய்யப்பட உள்ளது. சம்பா பட்டத்தில், விவசாயிகள் அதிக மகசூல் பெற, திருந்திய நெல் சாகுபடி முறையை கடைப்பிடிக்க, வேளாண் துறை நடவடிக்கை எடுத்து வருகிறது.

அதில், திருந்திய நெல் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு, அதிகபட்சம், 4.94 ஏக்கருக்கு, 6,000 ரூபாய் மானியம் அளிக்க திட்டமிடப்பட்டு உள்ளது. நடவு செய்த, 15 நாட்களுக்குள், விவசாயிகளின் வங்கிக் கணக்கில் மானியம் தொகை செலுத்தப்படும்.இத்திட்டத்தில் பயனடைய விரும்பும் விவசாயிகள், ஈக்காடு உதவி வேளாண் அலுவலர் அலுவலகம் மற்றும் கிளாம்பாக்கத்தில் உள்ள, திட்ட முன்பதிவு முன்னுரிமை பதிவேட்டில் பெயர் பதிவு செய்து கொள்ள வேண்டும்.இவ்வாறு, அவர் கூறினார்.

## நாட்டுக்கோழி குஞ்சு பராமரிப்பு இலவச பயிற்சி

நாமக்கல்: "வரும், 18ம் தேதி, நாட்டுக்கோழி குஞ்சுகள் பராமரிப்பு முறைகள் குறித்த, ஒரு நாள் இலவச பயிற்சி முகாம் நடக்கிறது' என, வேளாண் அறிவியல் நிலைய ஒருங்கிணைப்பாளர் மோகன் தெரிவித்துள்ளார்.

அவர், வெளியிட்ட அறிக்கை: நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில், வரும், 18ம் தேதி, நாட்டுக் கோழி குஞ்சுகள் பராமரிப்பு என்ற தலைப்பில், இலவச பயிற்சி முகாம் நடக்கிறது. முகாமில், நாட்டுக்கோழி ரகங்கள், குஞ்சு பொரிக்கும் முறை, குஞ்சு பொரிப்பான்களின் பயன்கள், வளர்ப்பு முறைகள், தீவன அளவுகள் குறித்த நடத்தப்படும். மேலும், இப்பயிற்சியில், நாட்டுக்கோழி குஞ்சுகளைத் தாக்கும் பல்வேறு நோய்கள், அறிகுறிகள் மற்றும் அவற்றைத் தடுக்கும் வழிமுறைகள் பற்றியும் விளக்கப்படும். அதில், விவசாயிகள், பண்ணையாளர்கள், ஊரக மகளிர், இளைஞர்கள் மற்றும் ஆர்வமுள்ளவர்கள் பங்கேற்கலாம். விருப்பம் உள்ளவர்கள், நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்திற்கு நேரில் வந்து பதிவு செய்து கொள்ளலாம். அல்லது 04286 - 266345 என்ற தொலைபேசி எண்ணில், வரும், 17ம் தேதிக்குள் பெயரை முன்பதிவு செய்து கொள்ளவேண்டும். இவ்வாறு, அதில் கூறப்பட்டுள்ளது.

## வறண்ட வயல்வெளிகளில் மழை நெல் நாற்று நடவு பணிகள் துரிதம்

கூடலுார்:கூடலுார் பகுதியில் நெல் நடவு பணிகளில், ஆதிவாசி பெண்கள் ஈடுப்பட்டுள்ளனர்.

கூடலுார் கடந்த மாதம், எதிர்பார்த்த பருவமழை பெய்யவில்லை. இதனால், வயல்களில் போதிய தண்ணீர் இன்றி, உழவு பணிகளை செய்தும், நெல் நாற்றுகளை நடவு செய்ய முடியாத சூழல் ஏற்பட்டது. சில பகுதிகளில், நடவு செய்ய பறிக்கப்பட்ட, நெல் நாற்றுகளும் கருகும் நிலை உருவானது. இதனால், நெல் விவசாயிகள் கவலையில் ஆழ்ந்தனர். இந்நிலையில், கடந்த சில நாட்களாக, கூடலுாரில் பெய்த மழையை தொடர்ந்து, விவசாயிகள் டிராக்டர் மூலம் வயல்களில் உழவு பணிகளை மேற்கொண்டு, நெல் நடவை துவங்கியுள்ளனர். இந்த பணியில் ஆதிவாசி பெண்கள் ஆவர்த்துடன் ஈடுப்பட்டு வருகினறனர். விவசாயிகள் கூறுகையில்,' பருவ மழை பொய்த்த காரணத்தால், வயல்கள் வறண்டு நெல் நாற்று நடவு பணி கேரளா உட்பட எல்லையோர கிராமங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. இந்நிலையில், கடந்த சில நாட்களாக பெய்து வரும் மழையினால், கூடலுாரில் உள்ள கிராமங்களில், நெல் நடவு பணிகள் மேற்கொண்டுள்ளோம்' என்றனர்.திருச்சி: சாகுபடிக்கு, மேட்டூர் அணையில் இருந்து, காவிரியில் திறக்கப்பட்ட தண்ணீர், நேற்று முன்தினம் இரவு, திருச்சி முக்கொம்புக்கு வந்து சேர்ந்தது. விவசாயிகளும், பொதுமக்களும் மலர் தூவி வரவேற்றனர். தமிழகத்தின் டெல்டா மாவட்டங்களில், சாகுபடிக்கு, ஜூன், 12ம் தேதி தண்ணீர் திறக்க வேண்டும் என, விவசாயிகள் கோரிக்கை வைத்தனர். மேட்டூர் அணையில் போதிய தண்ணீர் இல்லாததால், தண்ணீர் திறப்பு தாமதமானது. இந்நிலையில், முதல்வர் ஜெயலலிதா உத்தரவுப்படி ஆகஸ்ட், 9ம் தேதி, மேட்டூர் அணையில் இருந்து, காவிரியில் தண்ணீர் திறக்கப்பட்டது. அணையில் இருந்து திறக்கப்பட்டுள்ள, 13 ஆயிரம் கனஅடி தண்ணீர் ஈரோடு, கரூர் மாவட்டங்களை கடந்து, நேற்று முன்தினம் நள்ளிரவு, திருச்சி அடுத்த முக்கொம்புக்கு வந்து சேர்ந்தது. முதலில், 6,800 கனஅடி தண்ணீர்

வந்தது. தொடர்ந்து, முழு அளவிலான தண்ணீர் அணைக்கு வந்து சேர்ந்தது. நேற்று காலை, முக்கொம்பில் குவிந்த விவசாயிகளும், பொதுமக்களும், காவிரி நீருக்கு மலர் தூவி வணங்கினர். அங்கிருந்து திறக்கப்பட்டுள்ள தண்ணீர், கம்பரசம்பேட்டை தடுப்பணை வழியாக, திருச்சி நகரை கடந்து சென்றது. காவிரியில் தண்ணீர் செல்வதை, பாலத்தின் மீது நின்று பொதுமக்கள் ஆர்வத்துடன் பார்த்தனர். இன்று காலை, கல்லணையில் இருந்து, டெல்டா மாவட்ட பாசனத்துக்கு தண்ணீர் திறக்கப்படுகிறது. மேட்டூர் அணையில் திறக்கப்பட்ட தண்ணீர், 20 நாளில் கடைமடை பகுதிக்கு சென்று சேரும்.

### கால்நடை மருத்துவ முகாம்

வேதாரண்யம்: வேதாரண்யம் அடுத்த கோவில்பத்து கிராம பஞ்சாயத்து அலுவலக வளாகத்தில், தமிழ்நாடு கால்நடை பராமரிப்பு துறை சார்பில், சிறப்பு கால்நடை மருத்துவ முகாம் நடந்தது. முகாமில், கால்நடை மருத்துவர் நெல்சன் ஜெயக்குமார் தலைமையில், கால்நடை ஆய்வாளர் கருணாநிதி, பராமரிப்பு உதவியாளர்கள் சச்சிதானந்தம், ஞானப்பிரகாசம், கால்நடைதொடர்பு பணியாளர் தமிழ்ச்செல்வம் ஆகியோர் கால்நடைகளுக்கு சிகிச்சை அளித்தனர். முகாமில், 55 மாடுகள், 145 ஆடுகள் உள்ளிட்ட கால்நடைகளுக்கு கால்நடை மருத்துவர்கள், மாடுகளுக்கு மலடு நீக்கம் மற்றும் சினை ஊசி, சினை பரிசோதனை, குடற்புழு நீக்கம், நோயுற்ற ஆடு, மாடுகளுக்கு சிகிச்சை அளித்தனர். கால்நடை வளர்ப்பு விவசாயிகளுக்கு வளர்ப்பு மற்றும் பராமரிப்பு குறித்து ஆலோசனைகளை, மருத்துவர்கள் வழங்கினர்.

### காய்கறி கழிவில் இயற்கை உரம் சந்தை விற்பனையில் சாதனை

காரைக்குடி:பள்ளத்தூர் பேரூராட்சி பகுதியில் சேகரமாகும் காய்கறி, மற்றும் இயற்கை கழிவுகளை மட்க வைத்து மண்புழு உரமாக்கி அதே சந்தையில் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

பள்ளத்தூர் பேரூராட்சியில் 200 வணிக நிறுவனங்கள் உள்ளன. வெள்ளிதோறும் வாரச்சந்தை இயங்கி வருகிறது. நாள் ஒன்றுக்கு 1.25 டன் குப்பை சேகரமாகிறது. இதில் மட்ககூடிய கழிவு 400 கிலோ. எளிதில் மட்கக்கூடிய காய்கறி கழிவு, இலை கழிவுகளை தனியாக சேகரித்து அவற்றை இயற்கை உரமாக மாற்றி சந்தை மட்டுமன்றி விவசாயிகளுக்கும் நேரடியாக விற்பனை செய்து வருகின்றனர் பேரூராட்சி நிர்வாகத்தினர்.

செயல் அலுவலர் கண்ணன் கூறும்போது: பள்ளத்தூர் வாரச்சந்தை, தினசரி ஓட்டல் மற்றும் கடைகளில் கிடைக்கும் ஓட்டல் கழிவு தனி லாரி மூலம், காலை 6 முதல் 9 மணிக்குள் சேகரிக்கப்படுகிறது. அவற்றை கானாடு காத்தான் உரப்பூங்காவுக்கு கொண்டு சென்று, அங்கு அமைக்கப்பட்டுள்ள 4 தொட்டிகள் மூலம் மண்புழு, கலவை உரமாக மாற்றி வருகிறோம்.

எளிதில் மட்க கூடிய ஈரம் நிறைந்த கழிவுகளை முதல் நான்கு நாட்கள் அழுக வைத்து, அவற்றை கிண்டி விட்டு, அதில் தொட்டிக்கு மூன்று முதல் நான்கு கிலோ மண்புழுவுடன் சாணத்தை சேர்த்து கலக்குகிறோம். 21 நாள் மட்கிய பின் அவை மண்புழு உரமாக மாறிவிடும்.


இதில் மட்க நாளாகும் கழிவுகளை தனியாக பிரித்தெடுத்து அதில் "இ.எம்.சொலூஷன்' எனப்படும் பூஞ்சை காளானை சேர்த்து அடுக்குகளாக வைக்கின்றோம். எட்டு அடி உயர குப்பை 2 மாதத்தில் 2 அடியாக குறைந்து விடும். இது கலவை உரமாக பயன்படுகிறது. மண்புழு

உரம் கிலோ ரூ.10க்கும், கலவை உரம் ரூ.5-க்கும் விற்பனை செய்கிறோம். ஒரு டன் மண்புழு உரம் இருப்பு உள்ளது.

எந்த சந்தையில் காய்கறி கழிவுகளை சேகரித்தோமோ அதே சந்தையில் அவற்றை உரமாக்கி விற்பனையும் செய்து வருகிறோம். தோட்டக்கலைத்துறை மூலம் விவசாயிகளுக்கு மொத்தமாகவும் வழங்க தீர்மானித்துள்ளோம், என்றார். கானாடுகாத்தான் பேரூராட்சியும் இதே முறையில் உர தயாரிப்பில் ஈடுபட்டு வருகிறது.

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**நிலக்கடலையில் நோய்த் தடுப்பு முறைகள்**



நிலக்கடலையின் மகசூலை குறைக்கக்கூடிய பல்வேறு காரணிகளுள் நோய்களினால் ஏற்படும் சேதம் முக்கியப் பங்கு வகிக்கிறது. இவற்றில்

பூஞ்சாணங்கள், நச்சுக்கிருமிகளால் ஏற்படும் நோய்களே அதிக சேதத்தை விளைவிக்கும்.

இப்பயிரைத் தாக்கும் நோய்களில் சில இலைகளில் தோன்றி சேதம் ஏற்படுத்தக் கூடியவை. சில வகை மண்வழிப் பரவும் தன்மை கொண்டவை. தற்போது இந்த வகையான மண் மூலம் பரவும் நோய்களைப் பற்றியும் அவற்றைக் கட்டுப்படுத்தும் முறைகளையும் அறிந்து கொள்வது நல்லது.

இலைப்புள்ளி நோய்: இந்தியாவில் நிலக்கடலை சாகுபடி செய்யப்படும் எல்லா மாநிலங்களிலும் இந்த நோய் தோன்றுகிறது. மானாவாரி, இறவைப் பயிர்களையும் இந்த நோய் தாக்கக்கூடியது. இவை முன்பருவ இலைப்புள்ளி நோய், பின்பருவ இலைப்புள்ளி நோய் என இருவகைப்படும்.

அறிகுறிகள்: இலைப்புள்ளி நோய்கள் இரண்டு வெவ்வேறு இனங்களைச் சேர்ந்த நோய்க் காரணிகளால் ஏற்படுகின்றன. ஆனாலும் இரு நோய்களும் வேறுபட்ட அறிகுறிகளை ஒரே இலையில், ஒரேசமயத்தில் தோற்றுவிக்கக் கூடியவை.

முதலில் தோன்றக் கூடிய முன்பருவ இலைப்புள்ளி நோய் பெரும்பாலும் விதைத்த 30 நாள்களில் தோன்றும். முதலில் இலைகளில் கருமைநிற வட்ட வடிவப் புள்ளிகள் சிறியதாகத் தோன்றும். நாளடைவில் இவை விரிவடைந்து 3-8 மி.மீட்டர் விட்டம் வரையிலான புள்ளிகளாக மாறும். ஒரே இலையில் சில புள்ளிகளிலிருந்து, பல புள்ளிகள் வரை தோன்றும். புள்ளிகள் ஒன்றோடு ஒன்று இணைந்து, ஒழுங்கற்ற வடிவமாக மாறும். கரும் பழுப்புநிற புள்ளிகளைச் சுற்றி பளிச்சென்ற மஞ்சள் நிறவளையத்தைக் கொண்டும் அடிப்பரப்பு இளம் பழுப்பு நிறமாகவும் தென்படும்.

பின்பருவ இலைப்புள்ளி நோயின் அறிகுறி பயிர் விதைத்த சுமார் 40-50

நாள்களில் தோன்றும். இந்த நோய் காரணி தோற்றுவிக்கும் புள்ளிகள் சிறியதாகவும், சுமார் 1-6 மி. மீட்டர் வரை விட்டத்தைக் கொண்டும் காணப்படும். புள்ளிகளின் மேற்பரப்பு கரும்பழுப்பு அல்லது கருமை நிறத்திலும், அடிப்பரப்பு நல்ல கருமை நிறத்திலும் தென்படும். இப்புள்ளிகளைச் சுற்றி மஞ்சள் நிற வளைப்பகுதி காணப்படாது. புள்ளிகள் பெரும்பாலும் இலைகளில் காணப்பட்டாலும், இலைக்காம்பு, தண்டு, பூக்காம்பு போன்ற பாகங்களிலும் தென்படும். பூக்கும்பருவத்திலிருந்து, அறுவடை வரையில் நோயின் தீவிரம் அதிகமாகக் காணப்படும். நோய் அதிகமாகத் தாக்கிய இலைகள் காய்ந்து உதிர்ந்துவிடும்.

பூக்காம்புகள் தாக்கப்படும் போது காய் பிடிப்பதும் பாதிக்கும். மேலாண்மை நோயினால் தாக்கப்பட்டு நிலத்தில் உதிர்ந்து கிடக்கும் இலைகள், செடியின் பாகங்கள் போன்றவற்றை சேகரித்து எரித்துவிட வேண்டும். அறுவடைக்கு பின்னர் கொடிகளை நிலத்திலிருந்து முழுமையாக அப்புறப்படுத்துதல் அல்லது எரித்து விடுதல் வேண்டும். நோய் தாக்காத பயிரிலிருந்து தரமான விதைகளைத் தேர்வு செய்து விதைப்புக்கு பயன்படுத்த வேண்டும்.

பருவத்தில் விதைப்பு செய்தல் நல்லது. காணிப் பருவத்தில் காலம் தாழ்த்தி விதைப்பு செய்யும் பயிரில் அதிகம் நோய் தாக்குதல் இருப்பதாகக் கண்டறியப்பட்டுள்ளது. ஒரே நிலத்தில் தொடர்ந்து நிலக்கடலை பயிரிடுவதைத் தவிர்த்து பயிர் சுழற்சி முறையை கையாள வேண்டும்.

ஒரு கிலோ விதைக்கு, விதை நோத்தியாக டிரைக்கோடொமா விரிடி 4 கிராம் அல்லது சூடோமோனாஸ் ப்ளூரோசன்ஸ் 10 கிராம் என்ற அளவில் கலந்து விதைக்கலாம்.

காற்று மூலம் நோய் பரவுவதைக் கட்டுப்படுத்த நோயின் அறிகுறி தென்பட்டவுடன், ஏக்கருக்கு கார்பன்டாசிம் 200 கிராம் அல்லது குளோரோதலோனில் 400 கிராம் அல்லது மான்கோசெப் 400 கிராம் அல்லது டைபெனாகொனசோல் 200 மில்லி மருந்தை 200 லிட்டா நீரில் கலந்து தெளிக்க வேண்டும். நோயின் தீவிரத்தைப் பொறுத்து 15 நாள்கள் கழித்து மறுமுறையும் தெளிக்கலாம் என வேளாண் துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

தோட்டக்கலைப் பயிர்களின் உற்பத்தியை பெருக்க...



நிகழ் நிதியாண்டில் (2015-16) தோட்டக்கலைப் பயிர்களின் சாகுபடி பரப்பினை அதிகரிக்கவும் உற்பத்தி மற்றும் உற்பத்தி திறனை பெருக்கவும் தினசரி மற்றும் நிலையான வருமானத்தை பெறவும் தோட்டக்கலைத்துறை மூலம் பல்வேறு திட்டங்கள் தமிழக அரசால் செயல்படுத்தப்படவுள்ளன. அதனை விவசாயிகள் பயன்படுத்தி தோட்டக்கலைப் பயிர்களை சாகுபடி செய்து உற்பத்தியை பெருக்கி அதிக வருமானம் பெறலாம்.

ஒருங்கிணைந்த தோட்டக்கலை வளர்ச்சி இயக்கத் திட்டத்தில் தேசிய தோட்டக்கலை இயக்கம் மாநில, மத்திய அரசு நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் இத்திட்டத்தின் மூலம் மா அடர் நடவுக்கு ஹெக்டேருக்கு ரூ. 9840, மா தீவிர அடர் நடவுக்கு ஹெக்டேருக்கு ரூ. 26,880. கொய்யா அடர் நடவு ஹெக்டேருக்கு ரூ. 17,592. முந்திரி இயல்பான நடவு ஹெக்டேருக்கு ரூ. 12,000. திசு வளர்ப்பு வாழை சாகுபடிக்கு முதலாண்டில் ரூ. 30,750. வீரிய ஒட்டு ரக காய்கறிகள் ஹெக்டேருக்கு ரூ. 20,000. மிளகாய் பரப்பு விரிவாக்கம் ஹெக்டேருக்கு ரூ. 12,000. தென்னையில் ஊடு பயிராகக் கோகோ நடவு ஹெக்டேருக்கு மானியம் ரூ. 12,000. மா பழைய தோப்புகளை புனரமைக்க

ஹெக்டேருக்கு மானியம் ரூ. 20,000. நிழல் வலை கூடம் அமைக்க மானியம் ரூ. 355 சதுர மீட்டர், பசுமைக் குடில் அமைக்க ரூ. 468 சதுர மீட்டர் முதல் 1000 சதுர மீட்டர் வரை, நிலப் போர்வை - பாலித்தீன் விரிப்புகள் அமைக்க ஹெக்டேருக்கு ரூ. 16,000. இயந்திரமயமாக்குதல் இனத்தில் 20 எச்பி குதிரை திறனுக்கு குறைவு மற்றும் பவர் டில்லர் 20 எச்பி -க்கு குறைவாக உள்ளதற்கு மானியம் வழங்கப்படுகிறது.

தேசிய நீடித்த வேளாண் இயக்கம் - பண்ணை சார்ந்த நீர் மேலாண்மை: நுண்ணிய நீர்ப்பாசனம் அமைக்க குறு, சிறு விவசாயிகளுக்கு 100 சதமும், இதர விவசாயிகளுக்கு 75 சத மானியமும், நுண்ணீர் பாசனம் அமைக்க நிலம், நீர் ஆதாரம், அனைத்து ஆவணங்களுடன் விண்ணப்பிக்கலாம். ஒரு விவசாயி அதிகபட்சமாக 5 ஹெக்டேர் வரை மானியம் பெற முடியும்.

மானாவாரிப் பகுதி மேம்பாடு: விவசாயிகள் தங்கள் நில ஆவணங்களுடன் தோட்டக்கலைச் சார்ந்த பண்ணையம் அமைக்க 50 சத மானியம் வழங்கப்படுகிறது. அதிகபட்சமாக ஒரு பயனாளிக்கு 2 ஹெக்டேர் வரை மானியம் பெறலாம். ஒரு ஹெக்டேருக்கு ரூ. 25,000 மானியத்தில், நடவுப் பொருள்கள், பயிர் பாதுகாப்பு மருந்துகள், காய்கறி விதைகள், உரங்கள் இடைநிலைச் செலவுகள் ஆகியவைகள் வழங்கப்படுகிறது.

தேசிய மூலிகைப் பயிர்கள் இயக்கத் திட்டம்: அதிகபட்சமாக ஒரு பயனாளிக்கு 2 ஹெக்டேர் வரை மானியம் அளிக்கப்படும். கண்வலிக் கிழங்கு ஒரு ஹெக்டேருக்கு ரூ. 68,750. மருந்து கூர்க்கன் கிழங்கு (கோலியஸ்) ஒரு ஹெக்டேருக்கு ரூ. 8,600. பெருநெல்லி ஒரு ஹெக்டேருக்கு ரூ. 8,600 மானியம், பின்னேற்பு மானியம் அதாவது விவசாயி சாகுபடி செய்தவுடன் உரிய ஆவணங்களுடன் விண்ணப்பித்து

பெற்றுக் கொள்ளலாம். மானியத் தொகை விவசாயிகளின் வங்கிக் கணக்கில் செலுத்தப்படும்.

தேசிய மூங்கில் இயக்கம்: முள்ளில்லா மூங்கில் சாகுபடியை அதிகரிக்கும் வகையில் முள்ளில்லா மூங்கில் தோட்டங்கள் அமைக்க ஒரு ஹெக்டேருக்கு ரூ. 5,260 மானியம் வழங்கப்படுகிறது. ஒரு பயனாளிக்கு 2 ஹெக்டேர் வரை மானியத் தொகை, பின்னேற்பு மானியமாக பயனாளியின் வங்கிக் கணக்கில் செலுத்தப்படும்.

பெருநகர காய்கறி வளர்ச்சிக் குழுமத் திட்டம்: இத்திட்டத்தின் மூலம் விவசாயிகள் உற்பத்திக் குழுக்கள் அமைத்தல், குழுக்களில் உள்ள அனைத்து விவசாயிகளுக்கும் சாகுபடி தொழில்நுட்பப் பயிற்சி அளித்தல், திறந்தவெளி காய்கறி சாகுபடி செய்தல், பசுமைக்குடில் அமைத்து காய்கறி சாகுபடி செய்தல், நிழல் வலைக் கூடம் அமைத்து காய்கறி சாகுபடி செய்தல், உற்பத்தி செய்யப்பட்ட காய்கறிகளைச் சேகரித்து வைக்க சேமிப்புக் கூடம் வாடகைக்கு அமர்த்துதல், சேமித்து வைத்த காய்கறிகளை வெளிச்சந்தைக்கு எடுத்துச் சென்று விற்பனை செய்திட குளிரூட்டப்பட்ட வாகனங்கள் போன்ற இனங்கள் இத்திட்டத்தின் மூலம் செயல்படுத்தப்படவுள்ளன.

தேசிய நீடித்த வேளாண்மை இயக்கத் திட்டம்: தோட்டக்கலைப் பயிர்களில் அங்கக வேளாண்மையில் சுற்றுச்சூழல் மாசுபடாமல் நன்மை பயக்கும் வகையில் குறைந்த செலவில் தொழில்நுட்பங்களைக் கடைபிடித்து நஞ்சில்லா கிராமம் அல்லது அங்கக கிராமத்தை தொகுப்பு முறையில் தேர்வு செய்து ஒரு கிராமத்துக்கு 50 ஏக்கர் (20 ஹெக்டேர்) பரப்பளவுக்கு மாவட்டத்திலிருந்து கிராமங்கள் தேர்வு செய்யப்பட்டு திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது.

இத்திட்டத்தின் மூலம், பயிர் தேர்வு, பயனாளிகள் தேர்வு, குழுக்களாகப் பிரித்தல், கூட்டங்கள் நடத்துதல், இயற்கை அங்கக வேளாண்மை

செய்துள்ள வயல்களுக்கு கற்றறிவுப் பயணம் மேற்கொள்ளுதல், அங்கக வேளாண்மையில் பயிற்சி அளித்தல், மண் ஆய்வு செய்தல், பயிர் சாகுபடிக்கான இயற்கை சார்ந்த இடுபொருள்கள் வழங்குதல், அதனை அந்த சூழலில் உள்ள அனைத்து விவசாயிகளும் கடைப்பிடிக்கச் செய்தல், செயல்பாடுகள் அனைத்தையும் பதிவு செய்து அங்ககச் சான்று பெறுதல், விற்பனை வாய்ப்புகளை ஏற்படுத்துதல் முதலியவற்றை மக்கள் பங்கேற்பு இயக்கமாக மாற்றி சான்றிதழ் பெறும் திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது.

இதுகுறித்து புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் சு. கணேஷ் கூறியது:

புதுக்கோட்டை மாவட்டம் தோட்டக்கலைப் பயிர்கள் சாகுபடிக்கு உகந்த மாவட்டமாகத் திகழ்கிறது. மொத்த சாகுபடி பரப்பில் சுமார் 27 சதவீதப் பரப்பில் தோட்டக்கலைப் பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டு வருகின்றன. அதில் பழப் பயிர்கள் 5,221 ஹெக்டேரிலும், காய்கறிப் பயிர்கள் சுமார் 2,049 ஹெக்டேரிலும், மலர் வகைப் பயிர்கள் 750 ஹெக்டேரிலும், வாசனைத் திரவியப் பயிர்கள் 634 ஹெக்டேர் பரப்பிலும், மலைத் தோட்டப் பயிர்களான முந்திரி 15,283 ஹெக்டேர் பரப்பிலும் மற்றும் மூலிகை வகைப் பயிர்கள் சுமார் 42 ஹெக்டேர் பரப்பளவிலும் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது.

இப்பரப்பை மேலும் அதிகரிக்கும் நோக்கில் அரசால் அறிவிக்கப்பட்டுள்ள மேற்காணும் தோட்டக்கலைத்துறை திட்டங்களை பெற அனைத்து வட்டாரங்களிலும் வட்டார தோட்டக்கலை உதவி இயக்குநர் அலுவலகங்களை விவசாயிகள் அணுகிப் பயன்பெறலாம்.

**கடும் வறட்சி: இயற்கைத் தீவனங்களுக்கு தட்டுப்பாடு**



திருவள்ளூர் மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள கடும் வறட்சி காரணமாக, இயற்கைத் தீவனங்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதனால், கூடுதல் விலை கொடுத்து செயற்கைத் தீவனங்களை வாங்க முடியாமல் விவசாயிகள் கவலை அடந்துள்ளனர்.

விவசாயத்தைச் சார்ந்துள்ள திருவள்ளூர் மாவட்டத்தில் 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஏக்கரில் மானாவாரி நிலங்கள் உள்ளன. இந்தப் பகுதி விவசாயிகள் விவசாயத்துடன், கால்நடை வளர்ப்பிலும் ஆர்வம் காட்டி வருகின்றனர். மழைக் காலங்களில் விளையும் தானிய வகை பயிர்களை அறுவடைக்குப் பிறகு கால்நடைத் தீவனத்துக்குப் பயன்படுத்துவார்கள். சில விவசாயிகள் வெளியூர்களில் இருந்து வைக்கோலை விலைக்கு வாங்கி, இருப்பில் வைத்து தட்டுப்பாடு ஏற்படும்போது பயன்படுத்துவர்.

நிகழாண்டு கோடை காலத்தில் தீவனத்துக்குக் கடும் தட்டுப்பாடு ஏற்பட்டது. அந்த நேரத்தில் குறிப்பாக ஏப்ரல், மே மாதங்களில் ஓரளவு கோடை மழை பெய்ததால், விளைந்த இயற்கைத் தீவனம் விவசாயிகளுக்குக் கை கொடுத்தது. கடந்த இரண்டு மாதங்களாக வாட்டி வதைக்கும் வெயில் காரணமாக மாவட்டத்தில் கடும் வறட்சி

ஏற்பட்டுள்ளது. இதனால் கால்நடைகளுக்குத் தேவையான இயற்கைத் தீவனங்களுக்கு மீண்டும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில், செயற்கைத் தீவனங்கள் விலையும் பல மடங்கு உயர்ந்துள்ளது. விவசாயிகளிடம் குறைவான அளவு இருப்பில் இருந்த தீவனங்களும் தீர்ந்து விட்டன. இதனால், கால்நடை வளர்ப்பவர்கள் தற்போது தீவனத்துக்குத் திண்டாடும் நிலை ஏற்பட்டுள்ளது. கால்நடை வளர்ப்பில் ஈடுபட்டுள்ள விவசாயிகள், கூடுதல் செலவு செய்து செயற்கைத் தீவனங்களை வாங்கி கால்

நடைகளை பராமரிக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். இது விவசாயிகளிடையே மிகவும் கவலையை ஏற்படுத்தியுள்ளது.

நிகழாண்டு பருவ மழை பெய்தால் மட்டுமே கால்நடை விவசாயிகளின் வாழ்வாதாரம் உயரும் என விவசாயிகள் தெரிவித்தனர்.

**வண்டலூர் உயிரியல் பூங்காவில் புதிதாக வண்ணத்துப் பூச்சி பூங்கா: அமைச்சர் ஆய்வு**

- 

வண்டலூர் அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவில் புதிதாக அமைக்கப்பட்டு வரும் வண்ணத்துப் பூச்சி பூங்கா, வண்ணத்துப்பூச்சி புகைப்படக் கூடம், பராமரிப்பு அலுவலகம், பறவைகள் கூடம் ஆகியவற்றை வனத் துறை அமைச்சர் எம்.எஸ்.எம்.ஆனந்தன் புதன்கிழமை ஆய்வு மேற்கொண்டார்.

இதுகுறித்து புதன்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு: வண்டலூர் அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவில் 2.5 ஏக்கர் பரப்பளவில் ரூ.4 கோடி மதிப்பீட்டில் புதியதாக அமைக்கப்பட்டு வரும் வண்ணத்துப் பூச்சி பூங்காவை வனத் துறை அமைச்சர் எம்.எஸ்.எம்.ஆனந்தன் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். வண்ணத்துப் பூச்சி பூங்காவில் உள்ள வண்ணத்துப் பூச்சி இல்லம், வண்ணத்துப் பூச்சி புகைப்படக் கூடம், பராமரிப்பு அலுவலகம், பறவைகள் கூடம் ஆகியவற்றை நேரில் சென்று பார்வையிட்டு, தற்போதைய நிலை குறித்தும் அதிகாரிகளிடம் கேட்டறிந்தார். முன்னதாக நன்மங்கலத்தில் ரூ. 6.90 கோடி மதிப்பில் புதிதாக தமிழ்நாடு வன உயிரியல்-பசுமையாக்கல் திட்டம், நவீன விளக்கக் கூட மையம் கட்டுமானப் பணிகளையும் அமைச்சர் பார்வையிட்டார்.

**தமிழகம், புதுச்சேரியில் இன்று மழைக்கு வாய்ப்பு**

வெப்பச் சலனம் காரணமாக தமிழகம், புதுச்சேரியில் சில இடங்களில் வியாழக்கிழமை (ஆக.13) இடியுடன் கூடிய மழை பெய்ய வாய்ப்புள்ளது என, வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இதுகுறித்து வானிலை ஆய்வு மைய அதிகாரி கூறியதாவது: வெப்பச் சலனம் காரணமாக, கடந்த இரண்டு வாரங்களுக்கும் மேலாக தமிழகம், புதுச்சேரியில் இடியுடன் கூடிய மழை பெய்து வருகிறது. குறிப்பாக, சென்னை, புறநகர் பகுதிகளில் மாலை அல்லது இரவு

நேரத்தில் இடியுடன் கூடிய மழை பெய்து வருகிறது. வெப்பச் சலனம் நீடிப்பதால், தமிழகம், புதுச்சேரியில் வியாழக்கிழமை இடியுடன் கூடிய மழை ஓரிரு இடங்களில் பெய்யும். சென்னை மாநகரைப் பொருத்தவரை, வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும்.

மாலை அல்லது இரவு நேரங்களில் இடியுடன் கூடிய மழை பெய்யும். நகரின் அதிகபட்ச வெப்பநிலை 97 டிகிரியாக இருக்கும். அடுத்து வரும் இரண்டு நாள்களுக்கும் தமிழகம், புதுச்சேரியில் மழை பெய்யும் வாய்ப்புள்ளது.

கடந்த 24 மணி நேரத்தில் கோவை மாவட்டம் சின்னக்கல்லாறு, வால்பாறை தாலுகா அலுவலகத்தில் 70 மி.மீ, தேனி மாவட்டம் பெரியாறில் 30 மி.மீ, நீலகிரி மாவட்டம் நடுவட்டம், வேலூர் மாவட்டம் காவேரிப்பாக்கம் ஆகிய இடங்களில் 20 மி.மீட்டர் மழை பதிவானதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

**பயிர்க் காப்பீடு: காலக்கெடுவை நீட்டிக்க ஒடிஸா அரசு கோரிக்கை**

நடப்பாண்டு காரீப் பயிர்ப் பருவத்தின்போது தேசிய வேளாண் காப்பீட்டுத் திட்டத்தில் பயிர்க் கடன் பெறாத விவசாயிகளும் காப்பீடு கோரி விண்ணப்பிக்கும் வகையில் அதன் காலக்கெடுவை நீட்டிக்குமாறு மத்திய அரசை ஒடிஸா முதல்வர் நவீன் பட்நாயக் கேட்டுக் கொண்டார். இது தொடர்பாக மத்திய வேளாண் அமைச்சர் ராதாமோகன் சிங்குக்கு நவீன் பட்நாயக் புதன்கிழமை எழுதிய கடித விவரம்: சீரற்று, பற்றாக்குறையாகப் பெய்யும் மழையால் விவசாயப் பணிகள் தாமதமடைந்து வருகின்றன. எனவே 2015 கரீப் பருவத்தின்போது வேளாண் கடன் பெறாத விவசாயிகளும் காப்பீட்டுத் திட்டத்துக்குள்

வரும் வகையில் விண்ணப்பிப்பதற்கான கடைசி தேதியை நீட்டிக்குமாறு மத்திய வேளாண் அமைச்சகத்திடம் ஒடிஸா அரசு வேண்டுகோள் விடுத்திருக்கிறது.

பயிர்க் கடன் பெறாதவர்களும் இத் திட்டத்தில் சேர வசதியாக விண்ணப்பிக்கும் காலக்கெடுவை ஜூலை 31ஆம் தேதியிலிருந்து வரும் இம்மாதம் 31ஆம் தேதிக்கு நீட்டிக்க வேண்டும் என்று அந்தக் கடிதத்தில் நவீன் பட்நாயக் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

**இயற்கை விவசாயத்துக்கு வித்திடுகிறது வேளாண் பல்கலைக.தங்கராஜா**

மண்ணுக்கும் மனிதருக்கும் தீங்கு விளைவிக்கும் ரசாயன வேளாண்மையைத் தவிர்த்து, அனைவருக்கும் உகந்த இயற்கை விவசாயத்தை ஊக்குவிக்க தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் முடிவு செய்துள்ளது.

அதற்கான முதல்படியாக மாநிலம் முழுவதிலும் மண்ணின் வளத்தை பெருக்கும் வகையில், பசுந்தாள் உரமாக பயன்படும் சணப்பு பயிரின் விதைகளை சேகரிக்கத் திட்டமிட்டுள்ளது.

தமிழகத்தில் இயற்கையான உரங்களையும், பூச்சிக் கொல்லிகளையுமே காலம் காலமாக பயன்படுத்தி வந்த விவசாயிகள், பசுமைப் புரட்சி காலத்தில் கூடுதல் உற்பத்தி இலக்கிற்காக ரசாயன உரங்களையும், பூச்சிக் கொல்லிகளையும் அதிகமாக பயன்படுத்த நிர்பந்திக்கப்பட்டனர்.

நாளடைவில் பூச்சிக் கொல்லிகளால் மண் மலடானதுடன் மக்களுக்கும், கால்நடைகளுக்கும் பல்வேறு புதிய நோய்கள் தோன்றின. வேளாண் தொழிலுக்கு உதவுவதாக அறிமுகமான ரசாயன உரங்கள், அதை வேகமாக அழித்து வந்திருப்பதாக புள்ளி விவரங்கள் இப்போது எச்சரிக்கின்றன.

இதனால் நஞ்சில்லா விவசாயம் மீதான விழிப்புணர்வு தமிழகத்தில் அதிகரித்து வருகிறது. ரசாயனம் இடப்படாத விளை பொருளுக்கு பெரிய சந்தை வாய்ப்பும் ஏற்பட்டுள்ளது. ரசாயன உரத்துக்கு செலவிடும் பெரிய தொகை மீதமாவதால் விவசாயிகளும் இயல்பாகவே பாரம்பரிய விவசாய முறைக்கு மாறி வருகின்றனர்.

தொடங்கப்பட்டது முதலே ரசாயன உரங்கள், பூச்சிக் கொல்லிகள், விதைகளை பரிந்துரைத்து வந்த வேளாண்மை பல்கலைக்கழகமும் கால மாற்றத்தை உணர்ந்து, இப்போது இயற்கை விவசாயத்தை ஊக்குவிக்கக் கூடிய நிலைக்கு வந்துள்ளது.

பல ஆண்டுகளாக ரசாயனம் பயன்படுத்தப்பட்டு வந்த நிலத்தில் திடீரென இயற்கை விவசாயம் செய்ய முடியாது என்பதால், முதல்கட்டமாக மண்ணின் வளத்தை மீட்க வேளாண் பல்கலை திட்டமிட்டுள்ளது.

இதன் ஒரு கட்டமாக விவசாயிகளுக்கு பசுந்தாள் உரங்கள் மீதான ஆர்வத்தையும் விழிப்புணர்வையும் ஏற்படுத்த பல்கலைக்கழக வளாகம், மாநிலம் முழுவதிலும் உள்ள வேளாண் கல்லூரிகளில் உள்ள நிலங்களிலும் பசுந்தாள் உரமான சணப்பை பயிரிட துணை வேந்தர் கு.ராமசாமி உத்தரவிட்டுள்ளார்.

**சணப்பின் பயன்கள் என்ன**

தக்கைப் பூண்டு, கொத்தவரை, அகத்தி போன்றவற்றை பசுந்தாள் உரங்களாக விவசாயிகள் பயிரிட்டாலும் சணப்பை பயிரிடுவதால் மூன்று வித கூடுதல் நன்மைகள் உள்ளன. 90 நாள் பயிரான சணப்பை 40 நாள் வளர்ந்த நிலையில் அப்படியே மடக்கி உழுவதன் மூலம் மண்ணின் வளத்தை அதிகரிக்க முடியும்.

பூக்கும் தருணத்தில் இருக்கும் சணப்பை மடக்கி உழுவதால், அது காற்றிலுள்ள நைட்ரஜனை உறிஞ்சி மண்ணுக்குத் தருகிறது. மேலும், தழை மக்குவதால் கிடைக்கும் கனிம, கரிமச் சத்துகள், பயிர்களுக்கு

நன்மை செய்யும் பாக்டீரியாக்களை அதிகரிக்கின்றன. மண்ணின் நீர் உறிஞ்சும் திறன் அதிகரித்து, பசுந்தாள் உரத்தின் மூலம் விளை பொருள்களின் தரமும், விளைச்சலும் அதிகரிக்கின்றன.

முழுவதும் வளர்ந்த நிலையில் சணப்பை அறுவடை செய்து அதன் விதைகளை சேகரித்து விற்பனை செய்யலாம். ஒரு கிலோ சணப்பு விதை ரூ.85 வரை விற்பனையாவதாக வேளாண் பல்கலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. மேலும், இதன் விதைகள் எண்ணெய் வித்தாக பயன்படுத்தப்படுகிறது. இதன் எண்ணெய் மூட்டு வலிக்கு மருந்தாகவும், ஆயுர்வேத வைத்தியத்திலும் பயன்படுத்தப்படுகிறது.

மேலும், சணப்பை அதன் நாருக்காகவும் பயிரிடலாம். தண்டிலிருந்து கிடைக்கும் நாரில் இருந்து கயிறு, பைகள் தயாரிக்க முடியும். இவ்வாறாக மற்ற பசுந்தாள் உரங்களைக் காட்டிலும் கூடுதல் பலன்களைத் தரும் சணப்பை பயிரிட வேளாண் பல்கலைக்கழகம் விவசாயிகளுக்கு பரிந்துரைத்து வருகிறது.

**7 ஆயிரம் டன் சணப்பு விதை சேகரிக்க திட்டம்**

விவசாயிகளுக்கு சணப்பு மீதான ஆர்வத்தை தூண்டும் வகையிலும், ரசாயன உரங்கள் பயன்படுத்துவதை தவிர்க்க விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையிலும் கோவை வேளாண்மைப் பல்கலைக்கழகம், மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் உள்ள பல்கலைக்கழக கல்லூரிகள், ஆராய்ச்சி நிலையங்களிலும் சுமார் 100 ஏக்கரில் சணப்பு பயிரிடப்பட்டுள்ளது. இதைத் தவிர உழவர் பயிற்சி மையங்களுடன் தொடர்புடைய விவசாயிகளின் நிலத்திலும் சணப்பு பயிரிடப்பட்டுள்ளது.

இதன் மூலம் நடப்பாண்டில் மட்டும் சுமார் 70 டன் சணப்பு விதையை சேகரிக்கத் திட்டமிட்டிருப்பதாகக் கூறுகிறார் வேளாண்மைப் பல்கலைக்கழக துணை வேந்தர் கு.ராமசாமி. மேலும், இந்த விதையைப்

பயன்படுத்தி வரும் ஆண்டில் சுமார் 7 ஆயிரம் டன் விதைகளை சேகரிப்பதை இலக்காக வைத்துள்ளோம்.

இந்த விதைகளை வேளாண்மைத் துறைக்கு வழங்கி, அவர்கள் மூலம் விவசாயிகளுக்கு மானிய விலையில் வழங்குவதே திட்டத்தின் நோக்கம். முதல் கட்டமாக காவிரி படுகை மாவட்டங்களிலும், நெல்லை, கன்னியாகுமரி மாவட்டங்களிலும், காலப்போக்கில் மாநிலம் முழுவதிலும் பயிர் செய்யக் கூடிய எல்லா நிலங்களிலும் பசுந்தாள் உரப் பயிரை ஆண்டுக்கு ஒரு முறையோ அல்லது 2 ஆண்டுக்கு ஒரு முறையோ பயிரிடச் செய்ய உள்ளோம்.

தமிழகத்தில் 100 கிராமங்களைத் தேர்வு செய்து இயற்கை விவசாயத் திட்டத்தை செயல்படுத்த அரசு திட்டமிட்டுள்ளது. விவசாயிகள் திடீரென இயற்கை விவசாயத்துக்கு மாற முடியாது. எனவே முதல்கட்டமாக அவர்களது நிலத்தில் சணப்பை பயிரிட்டு நிலத்தை வளப்படுத்தி, பிறகு இயற்கை விவசாயத்துக்கு அவர்களை மாற்ற உள்ளோம் என்றார் ராமசாமி.

**சணப்பு வளர நீர், உரம் தேவையில்லை**

சணப்பு பயிரிட்டால் யூரியா, டி.ஏ.பி. போன்ற உரங்கள் பயன்படுத்தப்படுவது தவிர்க்கப்படும். இதனால் உர செலவு ஏக்கருக்கு ரூ.5 ஆயிரம் வரை வீதம் மீதமாகும் என்று கூறும் வேளாண் பல்கலை அதிகாரிகள், சணப்பை அடியுரமாக மட்டுமின்றி அதை மக்க வைத்து மேலுரமாகவும் பயன்படுத்த முடியும். இதனால் பூச்சித் தாக்குதல் குறைவதுடன் நன்மை செய்யும் பூச்சிகள் பாதிக்கப்படுவதும் தடுக்கப்படுவதாகக் கூறுகின்றனர்.

சணப்பு வறட்சியைத் தாங்கி விளையும் பயிர் என்பதால் அதிகளவில் தண்ணீர் தேவைப்படாது. இதை மானாவரியாக விதைக்கலாம். பூச்சிக்

கொல்லிகளோ, உரங்களோ, களை எடுக்கும் அவசியமோ இருக்காது. மேலும், பெரிய அளவில் செலவாகாது என்கின்றனர் அவர்கள்.

**மாவட்டத்தில் 34 தானிய சேமிப்புக் கிடங்குகள் கட்டப்படும்**

ஈரோடு மாவட்டத்தில் 34 தானிய சேமிப்புக் கிடங்குகள் கட்டப்படும் எனக் கூட்டுறவுத் துறை அமைச்சர் தெரிவித்தார்.

ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் புதன்கிழமை நடைபெற்ற கூட்டுறவுத் துறை அதிகாரிகளுடனான ஆய்வுக் கூட்டத்தில் அவர் பேசியதாவது:

ரேஷன் கடைகளில் உளுத்தம் பருப்பு, துவரம் பருப்பு மற்றும் பாமாயில் ஆகியவற்றை பொதுமக்களுக்குத் தேவையான அளவு இருப்பு வைத்து எவ்வித புகாருக்கும் இடமளிக்காமல் வழங்கவேண்டும்.

வேளாண் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக ஈரோடு மாவட்டத்தில் 2015-2016-ஆம் ஆண்டில் ரூ. 308.65 கோடி பயிர்க்கடன் குறியீடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஜூலை 31-ஆம் தேதி வரை 13,483 பேருக்கு ரூ. 96.50 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது.

தொடக்க வேளாண் கூட்டுறவுக் கடன் சங்க சேவையை விரைவுபடுத்தும் நோக்கில் இம்மாவட்டத்தில் 162 தொடக்க வேளாண் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் மற்றும் 1 மலைவாழ் மக்கள் பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் ஆகியன கணினி மயமாக்கப்பட்டுள்ளன. இம்மாவட்டத்தில் உள்ள 171 பொது சேவை மையங்கள் மூலமாகப் பொது மக்களுக்கான அரசு சேவை விரைவாக வழங்கப்படுகிறது.

விவசாயிகள் உற்பத்தி செய்த விளை பொருட்களைப் பாதுகாக்கும் வகையில் கடந்த 4 ஆண்டுகளில் 100 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 125 கிடங்குகளும், 1,000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட

7 கிடங்குகளும் என மொத்தம் 132 கிடங்குகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

இந்த ஆண்டில் 100 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 26 கிடங்குகளும், 500 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட கிடங்குகள் 5, 1,000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 3 கிடங்குகள் என மொத்தம் 34 கிடங்குகள் கட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. கிடங்குகள் கட்டும் பணிகளை அலுவலர்கள் பார்வையிட்டு, பணிகளை விரைந்து முடிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றார்.

இக்கூட்டத்தில், 71 பேருக்கு ரூ. 1.03 கோடி மதிப்பிலான கடனுதவிகளை அமைச்சர் செல்லூர் ராஜூ வழங்கினார். இந்த ஆய்வுக் கூட்டத்தில், மாவட்ட ஆட்சியர் எஸ்.பிரபாகர், கூட்டுறவுத் துறை பதிவாளர் ஜெயஸ்ரீ முரளிதரன், மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கித் தலைவர் என்.கிருஷ்ணராஜ், மாவட்டக் கூட்டுறவு ஒன்றியத் தலைவர் வி.தெய்வநாயகம், பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியத் தலைவர் பி.சி.ராமசாமி, மாவட்ட மொத்த விற்பனைப் பண்டக சாலைத் தலைவர் ஏ.ஆர்.ஜெகதீசன், கூட்டுறவுச் சங்க இணைப் பதிவாளர் சு.ராமதாஸ் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**பாரம்பரிய கால்நடை சிகிச்சை முறைகள்: புத்தகம் வெளியீடு**

கால்நடைகளுக்கான பாரம்பரிய சிகிச்சை முறைகள் குறித்த புத்தகம் வெளியீட்டு நிகழ்ச்சி அந்தியூரில் புதன்கிழமை நடைபெற்றது.

கவுந்தப்பாடி ஜெயம் பிராணிகள் நல அறக்கட்டளை சார்பில் கால்நடைகளுக்கான பாரம்பரிய சிகிச்சை என்ற புத்தகத்தை அதன் நிர்வாக இயக்குநர் கே.வி.கோவிந்தராஜ் எழுதியுள்ளார்.

இப்புத்தகம் வெளியீட்டு விழா ஈரோடு வள்ளியப்பா வித்யாலயா கல்வி நிலைய இயக்குநர் மோ.பிரமிளா முன்னிலையில் அந்தியூரில் நடைபெற்றது.

தமிழக விவசாயி பத்திரிக்கை ஆசிரியர் ஆர்.விஜயகுமார் புத்தகத்தை வெளியிட, அதை ஈரோடு வள்ளியப்பா வித்யாலயா பள்ளித் தாளாளர் மோகன்ராஜ் பெற்றுக் கொண்டார்.

நிர்வாக அலுவலர் பாக்கியவேல், மேலாண்மை இயக்குநர் எம்.விவேக் சந்தர், உலக மகளிர் உரிமைக் கழக உறுப்பினர் ஜி.ஜெயலட்சுமி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

இப்புத்தகத்தில், பக்க விளைவுகள் இல்லாமல் கால்நடைகளுக்கு சிகிச்சை அளிக்கும் முறைகள் குறித்து தெரிவிக்கப்பட்டுள்ளது. பாரம்பரியத்தை காப்பதன் அவசியம், பயன்கள், மூலிகையின் மூலமாக குடற்புழு நீக்கும் முறைகள், கோமாரி நோய் சிகிச்சை முறைகள், மூலிகை மசால் உருண்டை தயாரித்தல், பார்த்தீனியத்தை உரமாக மாற்றும் முறைகள் ஆகியவை குறித்தும் விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

**விவசாயிகள் கவனத்துக்கு...**

இயந்திரங்கள், உயிர் உரங்கள் ஆகியவற்றை மானிய விலையில் பெறலாம் என வெம்பாக்கம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் பாண்டியன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: நடப்பு சம்பா பருவத்தில் நவீன இயந்திர நடவு மூலம் நடவு செய்யும் விவசாயிகளுக்கும், தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழும் உயிர் உரங்கள், இயந்திரங்கள், இடுபொருள்கள் ஆகியவற்றை பெற பல்வேறு வகையான மானியங்கள் வழங்கப்படுகின்றன.

இவற்றை பெற விரும்பும் விவசாயிகள், தங்களது குடும்ப அட்டை நகல், வங்கிக் கணக்கு எண், சிட்டா நகல் ஆகியவற்றுடன் தங்கள் பகுதியைச் சேர்ந்த உதவி வேளாண்மை அலுவலரின் பரிந்துரையைப் பெற்று பயன் அடையலாம்.

தாடர்பு கொள்ள வேண்டிய உதவி வேளாண்மை அலுவலர்கள்: தூசி பிர்கா-ஆர்.சீனுவாசன் 9842097061, பெருங்கட்டூர் பிர்கா-ஆர்.தங்கராசு 9787312767, நாட்டேரி பிர்கா-குமார் 9626432588 என பாண்டியன் குறிப்பிட்டுள்ளார்.

## நீடாமங்கலத்திலிருந்து வேளாண் கூட்டுறவு சங்கங்களுக்கு 1,318 டன்

நீடாமங்கலத்திலிருந்து தஞ்சாவூர், திருவாரூர், நாகை மாவட்டங்களைச் சேர்ந்த தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்களுக்கு 1,318 டன் கிரிப்கோ யூரியா உரம் லாரிகள் மூலம் செவ்வாய்க்கிழமை அனுப்பி வைக்கப்பட்டது.

தூத்துக்குடி துறைமுகத்திலிருந்து சரக்கு ரயில் மூலம் 1,318 டன் கிரிப்கோ யூரியா மூட்டைகள் நீடாமங்கலம் வந்தது. இந்த யூரியா மூட்டைகள் சரக்கு ரயிலிலிருந்து 75 லாரிகளில் ஏற்றப்பட்டு, தஞ்சாவூர், திருவாரூர், நாகை மாவட்டங்களில் உள்ள 75 தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்களுக்கு கூட்டுறவு சங்கங்களின் இணைப் பதிவாளர் மற்றும் மேலாண்மை இயக்குநர் ராஜேந்திரபிரசாத் மேற்பார்வையில் அனுப்பிவைக்கப்பட்டது.

இந்த யூரியா உரம் சம்பா சாகுபடிக்கு விவசாயிகளுக்கு தட்டுப்பாடின்றி கிடைக்க தமிழக அரசால் வரவழைக்கப்பட்டுள்ளது.

**அணைகளில் குறையும் நீர்மட்டம் பாசன நீர் 750 கனஅடியாக குறைப்பு**

திருநெல்வேலி மாவட்டத்தில் அணைகளின் நீர்மட்டம் வேகமாக குறைந்து வருவதால், பாசனத்திற்கு திறக்கப்படும் நீரின் அளவு புதன்கிழமை 750 கனஅடியாக குறைக்கப்பட்டது.

நிகழாண்டில் தென்மேற்குப் பருவ மழை சரிவரப் பெய்யாத காரணத்தால், திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள அணைகளின் நீர்மட்டம் எதிர்பார்த்தவாறு உயரவில்லை. தற்போது தொடர்ந்து கடும் வெப்பம் நிலவி வருவதாலும், நீர்ப்பிடிப்பு பகுதியிலிருந்து அணைகளுக்கு நீர்வரத்து வெகுவாக குறைந்ததாலும் நீர்மட்டம் வேகமாக குறைந்து வருகிறது.

புதன்கிழமை நிலவரப்படி பாபநாசம் அணையின் நீர்மட்டம் 64.15 அடி, சேர்வலாறு அணையின் நீர்மட்டம் 76.25 அடி, மணிமுத்தாறு அணையின் நீர்மட்டம் 68.75 அடி, கடனாநதி அணையின் நீர்மட்டம் 49 அடி, ராமநதி அணையின் நீர்மட்டம் 54.50 அடி, கருப்பாநதி அணையின் நீர்மட்டம் 64.09 அடி, குண்டாறு அணையின் நீர்மட்டம் 35.09 அடி, அடவிநயினார் அணையின் நீர்மட்டம் 71.25 அடி, வடக்குப் பச்சையாறு அணையின் நீர்மட்டம் 28.87 அடி, கொடுமுடியாறு அணையின் நீர்மட்டம் 40.25 அடி, நம்பியாறு அணையின் நீர்மட்டம் 11.81 அடியாக இருந்தது.

பாபநாசம் அணைக்கு விநாடிக்கு 400 கனஅடியும், மணிமுத்தாறு அணைக்கு 21 கனஅடியும், கடனாநதி அணைக்கு 85.76 கனஅடியும், ராமநதி அணைக்கு 40 கனஅடியும், குண்டாறு அணைக்கு 15.71 கனஅடியும், அடவிநயினார் அணைக்கு 5 கனஅடியும், வடக்குப்

பச்சையாறு அணைக்கு 10 கனஅடியும், கொடுமுடியாறு அணைக்கு 39 கனஅடியும் நீர்வரத்து இருந்தது.

தண்ணீர் குறைப்பு: திருநெல்வேலி, தூத்துக்குடி ஆகிய மாவட்ட மக்களின் குடிநீர் மற்றும் பாசனத் தேவைக்காக, அணைகளிலிருந்து 1,500 கனஅடி தண்ணீர் திறக்கப்பட்டது. இந்நிலையில் பிரதான அணைகளான பாபநாசம், சேர்வலாறு, மணிமுத்தாறு ஆகிய அணைகளிலிருந்து புதன்கிழமை 750 கனஅடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டது.

சாகுபடிக்கு செப்டம்பர் மாத இறுதி வரை தண்ணீர் வழங்க வேண்டிய நிலையில்

நீர்மட்டம் குறைந்து வருவதால், அணைகளிலிருந்து திறந்து விடப்படும் நீரின் அளவு குறைக்கப்பட்டுள்ளதாக அணை வட்டாரங்கள் தெரிவித்தன.

**சூரிய மின் சக்தி மூலமாக லாபகரமான விவசாயம்!**

சூரிய மின் சக்தி மூலமாக கடலூர் விவசாயி லாபகரமான முறையில் விவசாயப்பணியில் ஈடுபட்டு வருகிறார்.

லாபகரமான தொழிலாக இல்லாததால் விவசாயப்பணியில் ஈடுபட்டுள்ள ஏராளமானவர்கள் அத்தொழிலிலிருந்து விலகி வருகின்றனர். விவசாயத்தின் தேவையை உணர்ந்த தமிழக அரசு, விவசாயிகள் லாபகரமான முறையில் விவசாயம் செய்திட பல்வேறு சலுகைத்திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறது. அதன் ஒருபகுதியாக விவசாயப்பணிகளுக்கு இயற்கையான சூரிய ஒளியின் மூலம் இயங்கும் மின்மோட்டார் மானியத் திட்டம் அறிவிக்கப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் கீழ் கடலூர் மாவட்டத்தில் கடந்த 2014ஆம் ஆண்டில் 5 குதிரைத் திறன் கொண்ட சூரியஒளி மின்மோட்டார்கள் 34 அமைக்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. ஒரு சூரியஒளி மின்மோட்டார் அமைக்க ரூ.4.40 லட்சம் செலவாகும் நிலையில், இத்திட்டத்தில் தமிழக அரசு மானியமாக ரூ.3.35 லட்சம் வழங்குகிறது. விவசாயிகளின் பங்களிப்புத் தொகையானது ரூ.1.05 லட்சம் மட்டுமே.

இத்திட்டத்தை பயன்படுத்தி கடலூர் வட்டம், புதுக்கடையைச் சேர்ந்த விவசாயி பி.வி.ஜெ.முத்துக்குமாரசாமி தனது விவசாய நிலத்தில் மின்மோட்டார் அமைத்து விவசாயப் பணியில் ஈடுபட்டு வருகிறார். இதனை மாவட்ட ஆட்சியர் எஸ்.சுரேஷ்குமார் கள ஆய்வுப்பணியாக செய்தியாளர்களுடன் சென்று செவ்வாய்க்கிழமை ஆய்வு செய்தார். அப்போது, சூரியஒளி மின் தகடு, மின்மோட்டார் செயல்பாடு, பயிரிடப்பட்டிருந்த கரும்பு, மிளகாய், மாடுகளுக்கான தீவனப்புல் ஆகியவற்றை பார்வையிட்டார்.

இதுகுறித்து விவசாயி முத்துக்குமாரசாமி கூறுகையில், மின்மோட்டார் மூலமாக விவசாயம் செய்த நேரத்தில் ரூ.8 ஆயிரம் முதல் ரூ.10 ஆயிரம் வரை மின் கட்டணமாக செலுத்தி வந்தேன். தற்போது சூரிய ஒளி மின்சாரம் மூலமாக 2 ஏக்கர் பயிர் செய்து வருகிறேன். காலை 6 மணி முதல் மாலை 5 மணி வரை சூரியஒளி மின்சாரத்தை பயன்படுத்துகிறேன். நல்ல லாபகரமானதாக விவசாயம் மாறி விட்டது என்றார்.

ஆட்சியர் எஸ்.சுரேஷ்குமார் கூறுகையில், சூரிய ஒளியின் மூலம் இயங்கும் மின் மோட்டார் மானிய திட்டத்தை தமிழக முதல்வர் அறிவித்து செயல்படுத்தி வருகிறார். இத்திட்டத்தில் மாநில அரசு 80 சதவீதமும், பயனாளி 20 சதவீதமும் பங்களிப்பு செலுத்த வேண்டும். 5 குதிரைத் திறன் கொண்ட மின்மோட்டார் மூலமாக 2 ஏக்கர் விவசாயம் செய்ய முடியும். 2015-16ஆம் ஆண்டுக்கு கடலூர் மாவட்டத்துக்கு 100 சூரியஒளி

மின்மோட்டார் ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது. இதனை விவசாயிகள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றார்.

**விவசாயிகளுக்கு ரூ.80 லட்சத்தில் தென்னை பராமரிப்பு உரம்**

கடலூர் வட்டத்தில், தென்னை விவசாயிகளுக்கு ரூ.79.72 லட்சம் மதிப்பீட்டில் உரங்கள் இலவசமாக வழங்கப்படுகிறது.

கடலூர் மாவட்டத்தில் கடந்த 2011-ம் ஆண்டு வீசிய தானே புயலால் பெருமளவில் தென்னை, முந்திரி, பலா, மா உள்ளிட்ட மரங்கள் விழுந்தன. இதனையடுத்து தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் தானே புயலால் பாதிக்கப்பட்ட தென்னை விவசாயிகளுக்கு தானே மறுவாழ்வு சிறப்பு தொகுப்புத் திட்டத்தின் கீழ் பல்வேறு உதவிகள் வழங்கப்பட்டன.

கீழே விழுந்த மரங்களை வெட்டி அப்புறப்படுத்த மரம் ஒன்றுக்கு ரூ.500-ம், அதே இடத்தில் மறு நடவு செய்ய விலையில்லா தென்னங் கன்றுகள் விநியோகம் செய்யப்பட்டன.

கடலூர் வட்டத்தில் 1675 விவசாயிகளுக்கு 79,725 தென்னங் கன்றுகள் வழங்கப்பட்டன. இதன் தொடர்ச்சியாக தென்னங் கன்றுகளின் பராமரிப்புக்காக உரங்களும் வழங்கப்பட்டு வருகிறது.

4-ம் ஆண்டாக தென்னை ஒன்றுக்கு ரூ.100 மதிப்பில் உயிர் உரங்கள், நுண்ணூட்ட உரங்கள், ரசாயன உரங்கள் வழங்கும் நிகழ்ச்சி கரைமேடு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியை செய்தியாளர்களுடன் கள ஆய்வுப் பயணமாகச் சென்ற ஆட்சியர் எஸ்.சுரேஷ்குமார் தொடங்கி வைத்தார்.

கடலூர் வட்டத்திலுள்ள 79,725 தென்னைகளுக்கு தலா ரூ.100 மதிப்பில் யூரியா, சூப்பர்பாஸ்பேட், பொட்டாஷ், அசோஸ்பைரில்லம்,

பாஸ்போபாக்டீரியா, தென்னை நுண்ணூட்டக் கலவை வழங்கப்படுகிறது.

தென்னங் கன்றுகளுக்கு உரம் வைக்க இதுவே சிறந்த தருணம் என்பதால் அனைத்து விவசாயிகளும் பேரூட்டச்சத்து, நுண்ணூட்டச் சத்து, உயிர் உரங்களை ஒருங்கிணைத்து இட்டு பயன்பெற வேண்டும் என்று ஆட்சியர் கேட்டுக்கொண்டார்.

அப்போது, திட்ட அலுவலர் மகேந்திரன், கடலூர் வேளாண்மை உதவி இயக்குநர் பொ.ஜெயக்குமார் ஆகியோர் உடனிருந்தனர்.

**வால்பாறையில் விடிய, விடிய பலத்த மழை அணைகளில் நீர்வரத்து அதிகரிப்பு**



வால்பாறை

கோவை மாவட்டம் வால்பாறை பகுதிகளில் கடந்த சில நாட்களாக மழை பெய்யவில்லை. இதனால் அங்குள்ள அணைகளில் நீர்வரத்து குறைந்தன. இந்த நிலையில் நேற்று முன்தினம் முதல் வால்பாறை பகுதியில் கனமழை பெய்து வருகிறது. அதிலும் குறிப்பாக நேற்று விடிய, விடிய பலத்த மழை பெய்தது.இதனால் ஆறுகள், நீர்வீழ்ச்சிகளுக்கு தண்ணீர் வரத்து அதிகரித்துள்ளது.

தொடர் மழை காரணமாக சோலையார் அணையின் நீர்மட்டம் உயர்ந்து வருகிறது. மழை காரணமாக தேயிலை பறிக்கும் பணி பாதிக்கப்பட்டது. பொதுமக்கள் வீடுகளில் முடங்கி கிடந்தனர். வால்பாறையில் 53 மி.மீ,சோலையார்அணையில் 67 மி.மீ, சின்னக்கல்லாரில் 24மி.மீ,நீராரில் 38மி.மீ மழையும் பெய்துள்ளது.

சோலையார்அணைக்கு வினாடிக்கு 1520 கனஅடி தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது.நீரார் அணையிலிருந்து 112.50 கனஅடியும்,சின்னக்கல்லாரிலிருந்து 959.88 கனஅடி தண்ணீரும்

சோலையார் அணைக்கு வந்துகொண்டிருக்கிறது. இந்த மழை காரணமாக வால்பாறையை அடுத்துள்ள பிர்லா நீர்வீழ்ச்சியில் தண்ணீர் ஆர்ப்பரித்து கொட்டி வருகிறது. இதே போல் பொள்ளாச்சி மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளில் லேசான மழை பெய்தது.

**பெருந்துறை வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கத்தில் ரூ.1½ கோடிக்கு கொப்பரை தேங்காய் விற்பனை**



பெருந்துறை,

பெருந்துறை வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் ரூ.1½ கோடிக்கு கொப்பரை தேங்காய் விற்பனை ஆனது.

<u>கொப்பரை தேங்காய்</u>

பெருந்துறை வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் வாரம்தோறும் புதன் மற்றும் சனிக்கிழமை கொப்பரை தேங்காய் ஏலம் நடைபெற்று வருகிறது. அதன்படி நேற்று

நடந்தஏலத்துக்கு ஈரோடு, திருப்பூர், தர்மபுரி, சேலம், கிருஷ்ணகிரி, நாமக்கல் ஆகிய பகுதிகளில் இருந்து உற்பத்தியாளர்கள், விவசாயிகள் கொப்பரை தேங்காய்களை கொண்டு வந்து இருந்தனர்.

மொத்தம் 3 ஆயிரத்து 705 மூட்டைகளில் ஒரு லட்சத்து 80 ஆயிரம் கிலோ எடை கொண்ட கொப்பரை தேங்காய்கள் கொண்டு வரப்பட்டு இருந்தன.

ரூ.1½ கோடிக்கு விற்பனை

இதில் முதல் தரம் கொப்பரை தேங்காய் கிலோ ஒன்று 77 ரூபாய் முதல் 81 ரூபாய் வரை ஏலம் எடுக்கப்பட்டது. 2–ம் தரம் கொப்பரை தேங்காய் கிலோ ஒன்று 49 ரூபாய் 20 காசு முதல் 75 ரூபாய் 35 காசு வரை ஏலம் போனது. கடந்த சனிக்கிழமையை விட கொப்பரை தேங்காயின் வரத்து 20 ஆயிரம் கிலோவும், விலை கிலோ ஒன்றுக்கு 3 ரூபாயும் குறைந்திருந்தது. இதற்கு காரணம் தேங்காய் எண்ணையின் விலை வீழ்ச்சியே ஆகும். நேற்று நடந்த ஏலத்தில் மொத்தம் ரூ.1 கோடியே 42 லட்சத்துக்கு கொப்பரை தேங்காய் விற்பனை ஆனது.

தூத்துக்குடி, விருதுநகர், வெள்ளக்கோவில், காங்கயம், ஊத்துக்குளி, சென்னை, பல்லடம் ஆகிய பகுதிகளில் இருந்து வந்த எண்ணை மில் முகவர்கள் கொப்பரை தேங்காயை போட்டி போட்டு வாங்கி சென்றனர்.

சத்தியில் பருத்தி ஏலம்

இதேபோல் சத்தி வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் பருத்தி ஏலம் நடந்தது. இந்த ஏலத்துக்கு சத்தி, அரியப்பம்பாளையம், கொத்துக்காடு, செண்பகபுதூர், கொமரபாளையம், பண்ணாரி, சிக்கரசம்பாளையம் உள்பட 40–க்கும் மேற்பட்ட கிராமங்களில் இருந்து விவசாயிகள் 1½ லட்சம் குவிண்டால் பருத்தி கொண்டு வரப்பட்டு இருந்தது. இது குவிண்டால் 3 ஆயிரத்து 800 ரூபாய் முதல் 4 ஆயிரத்து 260 ரூபாய் வரை ஏலம் போனது. மொத்தம் ரூ.42 லட்சத்துக்கு பருத்தி ஏலம் போனது.

சத்தி, புளியம்பட்டி, அவினாசி, தேவூர், திருப்பூர் ஆகிய பகுதிகளில் இருந்து வந்திருந்த பருத்தியை போட்டி போட்டு ஏலம் எடுத்து சென்றனர்.

**வண்டலூர் உயிரியல் பூங்காவில் வண்ணத்துப்பூச்சி பூங்காவை அமைச்சர் ஆனந்தன் ஆய்வு**



வண்டலூர்,

வண்டலூர் உயிரியல் பூங்காவில் வண்ணத்துப்பூச்சி பூங்காவை அமைச்சர் ஆனந்தன் நேரில் ஆய்வு செய்தார்.

வண்ணத்துப்பூச்சி பூங்கா

சென்னையை அடுத்த வண்டலூரில் உள்ள அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவில் வண்ணத்துப்பூச்சி பூங்கா அமைப்பதற்காக கடந்த 2011–ம் ஆண்டு மத்திய அரசு ரூ.4 கோடி நிதி ஒதுக்கியது.

இந்த நிதியை தமிழக சுற்றுலாத்துறையின் மூலம் வனத்துறையினர் பெற்று வண்டலூர் பூங்காவில் உள்ள ஒட்டேரி ஏரி அருகே இயற்கை எழிலோடு இருக்கும் விதத்திலும், வெளிநாட்டு தரத்திலும் சுமார் 2.5 ஏக்கர் பரப்பளவில் வண்ணத்துப்பூச்சி பூங்கா அமைக்கும் பணி கடந்த 2011–ம் ஆண்டு தொடங்கியது.

கண்ணாடி கூண்டு

இந்த பூங்காவில் வண்ணத்துப்பூச்சிகள் உலாவுவதற்கு மிக அழகிய வடிவில் பிரமாண்டமான வடிவில் கட்டிடம் அமைக்கப்பட்டு உள்ளது. இந்த கட்டிடம் அமைக்கும் பணியில் தமிழக பொதுப்பணிதுறையினர் ஈடுபட்டனர். தற்போது இந்த கட்டிடம் அமைக்கும் பணிகள் நிறைவு பெற்று விட்டன.

வண்ணத்துப்பூச்சி பூங்காவில் கட்டப்பட்டு உள்ள கட்டிடத்தின் மேல் பகுதியில் கண்ணாடியால் கூண்டு அமைக்கப்பட்டு உள்ளது. இந்த கூண்டுக்குள் பொதுமக்கள் சென்று நேரடியாக வண்ணத்துபூச்சிகள் பறந்து செல்வதை காணமுடியும். வண்ணத்துப்பூச்சி பூங்காவுக்கு வெளியே இருந்தபடியும் கண்ணாடி கூண்டுக்குள் இருக்கும் வண்ணத்துப்பூச்சிகளை பார்வையாளர்கள் பார்த்து ரசிக்கும் வகையில் அமைக்கப்பட்டு உள்ளது.

தாவரங்கள் நடப்பட்டு உள்ளன

இந்த பிரமாண்டமான கட்டிடத்தின் உள்பகுதி மற்றும் வெளி பகுதியில் தமிழ்நாடு, ஆந்திரா, கேரளா, பெங்களூரு உள்பட பல்வேறு மாநிலங்களில் இருந்து 200–க்கும் மேற்பட்ட வித விதமான தாவரங்கள்

கொண்டு வரப்பட்டு நடப்பட்டு உள்ளது. இதில் தேன் தாவரங்கள், கூண்டுபுழு உணவு தாவரங்கள் மற்றும் அதிக அளவு மலர்கள் கொண்ட தாவரங்கள் அதிக எண்ணிக்கையில் நடப்பட்டு உள்ளது.

இந்த தாவரங்களில் வண்ணத்துப்பூச்சிகள் தேன் சாப்பிடும். பின்னர் அங்கே அங்கேயே முட்டை போட்டு அதில் இருந்து கூட்டு புழு உற்பத்தியாகும். இதன் மூலம் அதிக அளவில் வண்ணத்துபூச்சிகள் பூங்காவில் இனப்பெருக்கம் ஏற்படும். தற்போது வண்ணத்துப்பூச்சி பூங்கா அமைக்கப்பட்டு உள்ள தாவரங்களில் பல்வேறு இடங்களில் இருந்து வண்ணத்துப்பூச்சிகள் வந்து செல்கின்றன.

<u>அமைச்சர் ஆய்வு</u>

இந்த வண்ணத்துப்பூச்சி பூங்கா, தற்போது திறப்பு விழாவுக்கு தயார் நிலையில் உள்ளது. இந்த நிலையில் புதியதாக பதவி ஏற்றுக்கொண்ட வனத்துறை அமைச்சர் எம்.எஸ்.எம்.ஆனந்தன், நேற்று காலை வண்டலூர் உயிரியல் பூங்காவுக்கு நேரில் வந்து வண்ணத்துப்பூச்சி பூங்காவை ஆய்வு செய்தார்.

பூங்காவில் புதியதாக அமைக்கப்பட்டு உள்ள பறவைகள் கூடத்தையும் அவர் ஆய்வு செய்தார். அப்போது அதிகாரிகளிடம் பூங்காவில் நடைபெறும் பணிகளையும், பூங்காவில் உள்ள விலங்குகளையும் பற்றி கேட்டறிந்தார்.

இந்த ஆய்வின் போது கால்நடைத்துறை அமைச்சர் டி.கே.எம்.சின்னையா, சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை முதன்மை செயலாளர் ஹன்ஸ்ராஜ் வர்மா, காஞ்சீபுரம் மாவட்ட கலெக்டர் வி.கே.சண்முகம், முதன்மை தலைமை வன பாதுகாவலர் (பொறுப்பு) மெல்கானி, வண்டலூர் அறிஞர் அண்ணா உயிரியல் பூங்கா இயக்குனர் கே.எஸ்.எஸ்.வி.பி.ரெட்டி மற்றும் வனத்துறை உயர் அலுவலர்கள் உடன் இருந்தனர்.

<u>விரைவில் திறக்கப்படும்</u>

மிக விரைவில் வண்ணத்துப்பூச்சி பூங்காவை பொதுமக்கள் பார்வையிடுவதற்கு முதல்–அமைச்சர் ஜெயலலிதா திறந்து வைப்பார் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

முன்னதாக தாம்பரம் அருகே உள்ள நன்மங்கலத்தில் புதிதாக ரூ.6.90 கோடி மதிப்பில் தமிழ்நாடு வன உயிரியல் மற்றும் பசுமையாக்கல் திட்டம் மற்றும் நவீன விளக்கக்கூட மையம் கட்டுமான பணிகளை வனத்துறை அமைச்சர் நேரில் சென்று ஆய்வு செய்தார்.

**தமிழக முதல்-அமைச்சர் ஜெயலலிதா வேளாண்மை துறை வளர்ச்சிக்காக பல்வேறு நலத்திட்டங்களை வழங்கி வருகிறார் கலெக்டர் ஜெயந்தி பேட்டி**



தமிழக முதல்-அமைச்சர் ஜெயலலிதா, வேளாண்மை துறை வளர்ச்சிக்காக பல்வேறு நலத்திட்டங்களை வழங்கி வருகிறார் என்று கலெக்டர் ஜெயந்தி கூறினார்.

புத்தூட்ட பயிற்சி

கரூர் மாவட்ட வேளாண்மைத்துறை மூலம் வேளாண் இடு பொருட்கள் விற்பனையாளர்களுக்கான புத்தூட்ட பயிற்சி கரூரில் நடந்தது. பயிற்சிக்கு கலெக்டர் ஜெயந்தி தலைமை தாங்கி பயிற்சியை தொடங்கி வைத்தார். தொடர்ந்து பயிற்சி கையேட்டை வெளியிட்டார். வேளாண்மை உதவி இயக்குநர்(தரக்கட்டுப்பாடு) சிவானந்தம் வரவேற்று பேசினார். வேளாண்மை இணை இயக்குநர் மாது விளக்க உரையாற்றினார். இந்நிகழ்ச்சியில் வேளாண்மை துறை அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர்.

பேட்டி

பின்னர் அவர் நிருபர்களுக்கு பேட்டியளித்தார். அப்போது அவர் கூறியதாவது:-

வேளாண் இடுபொருட்கள்

தமிழக முதல்-அமைச்சர் ஜெயலலிதா, தமிழகத்தில் இரண்டாம் பசுமைப் புரட்சியை ஏற்படுத்தி உணவு தானிய உற்பத்தியை 2 மடங்கு அதிகரிக்கவும், அதேபோன்று விவசாயிகளின் வருமானம் தற்போதைய நிலையில் இருந்து 2 அல்லது 3 மடங்காகவும் அதிகரிக்க வேண்டும் என்றும் அறிவித்து உள்ளார். அதன்படி இரண்டாவது பசுமை புரட்சியை முழுமையாக அடைந்திட முக்கிய பங்கு வகிப்பது வேளாண் இடுபொருட்கள் ஆகும்.

மேலும் இடு பொருட்களை உரிய நேரத்தில், உரிய இடத்தில் உரிய தரத்தில் வழங்கும் பணி விற்பனையாளர்களுக்குதான் உள்ளது. மேலும் அதிக தேவையும், அதிக அளவு மானிய தொகையும் கொண்ட ரசாயன உரங்களை விற்பனை செய்வதில் மிகுந்த கவனத்துடன் இருக்க வேண்டும்.

நலத்திட்டங்களை வழங்கி வருகிறார்விவசாயிகள் தங்கள் நிலத்தின் மண் வளம் குறித்து நன்றாக தெரிந்து கொள்ள வேண்டும்.

அதன் பின்னர் அதற்கு ஏற்ற பயிர் வகைகளை பயிட்டு அதற்குரிய புரதசத்து மற்றும் யூரியா வகைகளை சேர்க்கும் போது, நல்ல முறையில் பயிர்கள் வளர்ச்சியடைந்து 100 சதவீதம் மகசூல் பெறமுடியும். தற்போது அனைத்து விவசாயிகளுக்கும் மண்மாதிரி அட்டை வழங்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் மண்ணின் தன்மையை தெரிந்துகொள்ள பயன்யுள்ளதாக இருக்கும். தமிழக முதல்-அமைச்சர் ஜெயலலிதா, வேளாண்மைத்துறை வளர்சிக்காக பல்வேறு நலத்திட்டங்களை வழங்கி வருகிறார். இவ்வாறு அவர் கூறினார்.

**நெமிலேரி ஏரி வறண்டதால் விவசாயம் கடும் பாதிப்பு விவசாயிகள் கவலை**



தேன்கனிக்கோட்டை அருகே நெமிலேரி ஏரி வறண்டதால் விவசாயம் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

நெமிலேரி ஏரி கிருஷ்ணகிரி மாவட்டம் தேன்கனிக்கோட்டை தாலுகா மலை கிராமங்கள் நிறைந்த பகுதியாகும். இங்குள்ள அனுமந்தபுரம் ஊராட்சிக்கு உட்பட்டது நெமிலேரி ஏரி. இந்த ஏரி நெமிலேரி, அரசஜ்ஜூர் போன்ற கிராமங்களுக்கு நீர் ஆதாரமாக விளங்கியது. இந்த பகுதியில் பெரும்பாலானவர்கள் விவசாயத்தை நம்பி வாழ்ந்து வருகிறார்கள்.

இவர்கள் நெமிலேரியில் இருந்து வரும் நீரின் மூலமாக விவசாயம் செய்து வந்தார்கள். இந்த நிலையில் சமீப காலமாக அந்த பகுதியில் கடுமையான வெயில் காணப்படுகிறது. இதனால் நெமிலேரி ஏரி முற்றிலுமாக வற்றியது. இதனால் விவசாயிகள் பாதிக்கப்பட்டு உள்ளார்கள்.

விவசாயம் பாதிப்பு

தற்போது ஏரியில் முழங்கால் அளவிற்கே தண்ணீர் உள்ளதால் பலரும் ஏரியில் மீன் பிடித்து வருகிறார்கள். ஒரு காலத்தில் இந்த ஏரி நீரை நம்பி விவசாயம் செய்து வந்த விவசாயிகள் தற்போது ராகி, கம்பு போன்வற்றிற்கு தண்ணீர் இன்றி மிகவும் சிரமப்படுகிறார்கள். இது குறித்து அந்த பகுதியைச் சேர்ந்த விவசாயிகள் சிலர் கூறியதாவது:- நெமிலேரி ஏரி நீர் இந்த பகுதி விவசாயத்திற்கு பயன்பட்டு வந்தது. தற்போது தண்ணீர் இன்றி பயிர்கள் காய்கின்றன. இதனால் விவசாயிகள் கஷ்டமடைந்துள்ளனர். இவ்வாறு அவர்கள் கூறினார்கள்.

**அனைத்து பாசன பகுதிகளுக்கும் சென்றடைய நடவடிக்கை எடுக்க வேண்டும் கலெக்டர் பழனிசாமி அறிவுறுத்தல்**




மேட்டூர் அணையிலிருந்து வரும் தண்ணீரை அனைத்து பாசன பகுதிகளுக்கும் சென்றடைய பொதுப்பணித்துறை அலுவலர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கலெக்டர் பழனிசாமி அறிவுறுத்தி உள்ளார்.

ஆய்வு கூட்டம்

நாகை மாவட்டத்தில் சம்பா சாகுபடி நீர்பாசன முன்னேற்பாடுகள் குறித்த ஆய்வு கூட்டம் நாகை மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்கு கலெக்டர் பழனிசாமி தலைமை தாங்கி பேசினார். அப்போது அவர் கூறியதாவது:- காவிரி டெல்டா பாசன மாவட்டங்களில் நாகை மாவட்டம் முன்னிலை வகிக்கிறது. மேட்டூர் அணையிலிருந்து சம்பா சாகுபடிக்கு கடந்த 9-ந்தேதி தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. அதனைத்தொடர்ந்து கல்லணையிலிருந்து இன்று (வியாழக்கிழமை) தண்ணீர் விடப்பட உள்ளது. கல்லணையிலிருந்து திறந்து விடப்படும் தண்ணீரானது, பாசன கண்மாய்கள், ஏரிகளில் நிரப்பப்பட வேண்டியதையும், பாசனநீர் முறையாக பகிர்ந்தளிக்கப்படுவதையும் அந்தந்த பகுதியினை சேர்ந்த பொதுப்பணித்துறை, வருவாய்துறை மற்றும் பஞ்சாயத்து துறை அலுவலர்கள் கண்காணித்து ஆய்வு செய்ய வேண்டும். இதற்காக வட்டார அளவில் ஊராட்சி மன்ற தலைவர்களுக்கு கூட்டம் நடத்தி தகவல்களை தெரிவிக்க வேண்டும்.

வேளாண்மைத்துறை அலுவலர்கள் தண்ணீர் பாய்வதை கண்காணித்து அதில் பிரச்சினை ஏதும் இருப்பின் பொதுப்பணித்துறை அலுவலர்களுக்கு தெரிவிக்க வேண்டும். பொதுப்பணித்துறை அலுவலர்கள் அதனை சரிசெய்ய உடன் நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.

இடுபொருட்கள்

மேலும், கோட்ட அளவில் விவசாயிகள் பாசன மற்றும் இடுபொருட்கள்

குறித்த பிரச்சினைகளை தீர்வு செய்ய மாதந்தோறும், முதலாவது செவ்வாய்க்கிழமை முற்பகலில் நாகை வருவாய் கோட்டத்திலும், பிற்பகலில் மயிலாடுதுறை வருவாய் கோட்டத்திலும், வருவாய் கோட்ட அலுவலர் தலைமையில் விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் நடத்த வேண்டும். இதில் சம்பந்தப்பட்ட அலுவலர்கள் கட்டாயம் கலந்து கொண்டு விவசாயிகளுக்கு ஆலோசனைகள் வழங்க வேண்டும். இது வருகிற 18-ந்தேதி முதல், மேட்டூர் அணையில் நீர்வரத்து குறையும் நாள் வரை நடைபெற வேண்டும். மேலும், சம்பா, தாளடி பருவத்திற்கு இலக்காக நிர்ணயிக்கப்பட்டுள்ள சாகுபடி பரப்பான 3 லட்சத்து 25 ஆயிரம் ஏக்கரை எய்திட நடவடிக்கையும், அதிகபட்ச உற்பத்தியினை அடைய தேவையான முன்னேற்பாடு பணிகளை சீரிய முறையில் செய்ய வேண்டும். வேளாண் இடுபொருட்களான விதை, உரங்கள் போன்றவைகள் தேவையான அளவு இருப்பில் வைத்திருக்க வேண்டும்.

குறைந்த வாடகை

காவிரி டெல்டா மாவட்டங்களில் நாகை மாவட்டத்தில் வெளிமாவட்டங்களிலிருந்து வேளாண்மை பொறியியல் துறை மூலமாக டிராக்டர்கள், நேரடி நெல் விதைப்பு கருவிகள், லேசர் சமன்படுத்தும் எந்திரங்கள் மற்றும் நடவு எந்திரங்கள் வரவழைத்து விவசாயிகளுக்கு குறைந்த வாடகையில் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மேட்டூர் அணையிலிருந்து வரும் தண்ணீரை முறை வைத்து அனைத்து பாசன பகுதிகளுக்கும் உரிய நேரத்தில் சென்றடைய பொதுப்பணித்துறை அலுவலர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் பெஞ்சமின்பாபு, வேளாண்மை

இணை இயக்குனர் மயில்வாகனன், காவிரி வடிநில கோட்டம் கிழக்கு, மயிலாடுதுறை, காவிரி வடிநில கோட்டம், தஞ்சாவூர், உதவி இயக்குனர் (ஊராட்சி) மற்றும் அனைத்து வட்டார வளர்ச்சி அலுவலர்கள், அனைத்து நகராட்சி ஆணையர்கள், செயற்பொறியாளர்கள், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், பொதுப்பணித்துறை, உதவி செயற்பொறியாளர்கள் மற்றும் உதவி பொறியாளர்கள், வேளாண்மை துறை வேளாண்மை அலுவலர்கள், துணை வேளாண்மை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**கல்லணையில் இன்று தண்ணீர் திறப்பு 6 அமைச்சர்கள், 5 கலெக்டர்கள் பங்கேற்பு**




டெல்டா பாசனத்துக்கு கல்லணை இருந்து இன்று தண்ணீர்

திறக்கப்படுகிறது. திறப்பு விழாவில் 6 அமைச்சர்கள், 5 மாவட்ட கலெக்டர்கள் கலந்து கொள்கிறார்கள்.

மேட்டூர் அணை திறப்பு

காவிரி டெல்டா பகுதியான தஞ்சை, நாகை, திருவாரூர் மாவட்டங்களில் பாசனத்துக்காக மேட்டூர் அணை ஜூன் மாதம் 12-ந்தேதி திறக்கப்படுவது வழக்கம். ஆனால் இந்த ஆண்டு மேட்டூர் அணையில் போதிய தண்ணீர் இல்லாததால் அணை ஜூன் மாதம் 12-ந்தேதி திறக்கப்படவில்லை. இந்த நிலையில் காவிரி நீர் பிடிப்பு பகுதிகளில் தென் மேற்கு பருவமழை பெய்ததாலும் மேட்டூர் அணைக்கு போதிய அளவு தண்ணீர் வரவில்லை.

இதையடுத்து மேட்டூர் அணையில் 96 அடி நீர் இருந்ததால், காவிரி டெல்டா பாசனத்துக்காக மேட்டூர் அணையில் இருந்து முதல்-அமைச்சர் ஜெயலலிதா உத்தரவுப்படி கடந்த 9-ந்தேதி தண்ணீர் திறந்து விடப்பட்டது. மேட்டூர் அணையில் இருந்து 9 ஆயிரம் கன அடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டது. இந்த தண்ணீர் நேற்று நள்ளிரவு தஞ்சை கல்லணைக்கு வந்து சேர்ந்தது.

6 அமைச்சர்கள் பங்கேற்பு

கல்லணையில் இருந்து இன்று (வியாழக்கிழமை) காலை 10.45 மணிக்கு தண்ணீர் திறந்து விடப்படுகிறது. முதலில் காவிரியிலும், அதன் பின்னர் வெண்ணாறு, கல்லணைக்கால்வாய், கொள்ளிடம் ஆகியவற்றிலும் தண்ணீர் திறக்கப்படுகிறது.

கல்லணையில் இருந்து தண்ணீரை வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் வைத்திலிங்கம், உணவுத்துறை அமைச்சர் காமராஜ், மீன்வளத்துறை அமைச்சர் ஜெயபால், மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் விஜயபாஸ்கர், கதர் கிராம தொழில்துறை

அமைச்சர் பூனாட்சி, ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் சுப்பிரமணியன், தமிழக அரசு கொறடா மனோகரன் ஆகியோர் திறந்து விடுகிறார்கள்.

கோவில்களில் சிறப்பு பூஜை

கல்லணையில் இருந்து தண்ணீர் திறக்கப்படுவதையொட்டி கொள்ளிடத்தில் உள்ள ஆஞ்சநேயர் கோவில், கல்லணை பூங்காவில் உள்ள விநாயகர் கோவில், கொள்ளிடத்தின் உட்பகுதியில் உள்ள கருப்பண்ணசாமி கோவில்களில் இன்று காலை சிறப்பு பூஜைகள் செய்யப்படுகின்றன. மேலும் கல்லணையில் உள்ள கரிகால்சோழன், காவிரித்தாய், அகத்தியர், ராஜராஜன் சிலைகளுக்கும், கல்லணையை கட்டிய பொறியாளர் ஆர்தர் சிலைக்கும் மாலை அணிவித்து மரியாதை செய்யப்படுகிறது.இந்த விழாவில் கலெக்டர்கள் சுப்பையன் (தஞ்சை), மதிவாணன் (திருவாரூர்), பழனிசாமி (நாகை), கணேஷ் (புதுக்கோட்டை), பழனிசாமி (திருச்சி), எம்.எல்.ஏ.க்கள், திருச்சி மண்டல தலைமைப்பொறியாளர் அசோகன், கீழ்காவிரி வடிநில வட்ட கண்காணிப்பு பொறியாளர் சம்பத் மற்றும் செயற்பொறியாளர்கள், உதவி செயற்பொறியாளர்கள், பொதுப்பணித்துறை அதிகாரிகள், வேளாண்மைத்துறை அதிகாரிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், விவசாய சங்க பிரதிநிதிகள் உள்பட பலர் கலந்து கொள்கிறார்கள்.

**திருச்சியில் உளுந்தம் பருப்பு விலை உயர்வு**



திருச்சியில் உளுந்தம் பருப்பு விலை உயர்ந்து உள்ளது.

உளுந்தம் பருப்பு விலை உயர்வு

திருச்சியில் கடந்த வாரம் 100 கிலோ எடை கொண்ட உளுந்தம் பருப்பு மூட்டை ரூ.11 ஆயிரமாக இருந்தது. தற்போது மூட்டை ரூ.11 ஆயிரத்து 500 ஆக உயர்ந்து உள்ளது. சில்லறை விலையில் ஒரு கிலோ உளுந்தம்பருப்பு ரூ.120 வரை விற்பனை செய்யப்படுகிறது. துவரம்பருப்பு கடந்த வாரம் மூட்டை ரூ.11 ஆயிரத்து 500 ஆக இருந்தது தற்போது ரூ.12 ஆயிரமாக உயர்ந்து உள்ளது.

சில்லறை விலையில் துவரம்பருப்பு கிலோ ரூ.125-க்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது. உளுந்தம் பருப்பும், துவரம்பருப்பும் மூட்டைக்கு தலா ரூ.500 வரை விலை உயர்ந்து இருப்பது நுகர்வோரிடம் பெரும் பாதிப்பை ஏற்படுத்தி உள்ளது.

காரணம் என்ன?

உளுந்தம் பருப்பு மற்றும் துவரம்பருப்பு விலை உயர்வினால் ஓட்டல்களில் உணவு பண்டங்களின் விலை அதிகரிக்க வாய்ப்பு இருப்பதாகவும், பருப்பு வகைகள் விலை தொடர்ந்து உயர்ந்து கொண்டே செல்வதற்கு ஆன் லைன் வர்த்தகமே காரணம் என வியாபாரிகள் கூறினர்.

மத்திய அரசு ஆன்லைன் வர்த்தகத்திற்குதடை விதித்து விலை உயர்வினால் அவதிப்படும் பொதுமக்களை காப்பாற்ற நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் கோரிக்கை வைத்து உள்ளனர்.

## கோவை மாவட்டத்தில் 2015–16–ம் ஆண்டில் வங்கிகள் மூலம் ரூ.12,150 கோடி கடன் வழங்க இலக்கு கலெக்டர் அர்ச்சனா பட்நாயக் தகவல்



கோவை

கோவை மாவட்டத்தில் 2015–16–ம் ஆண்டில் வங்கிகள் மூலம் ரூ.12 ஆயிரத்து 150 கோடி கடன் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு உள்ளதாக கலெக்டர் அர்ச்சனா பட்நாயக் தெரிவித்து உள்ளார்.

கடன் திட்ட புத்தகம்

கோவை மாவட்டம் 2015–16–ம் ஆண்டுக்கான வருடாந்திர கடன் திட்ட புத்தகம் வெளியிடும் விழா கோவை மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் நேற்று நடந்தது. மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் கே.கிருஷ்ணமூர்த்தி முன்னிலை வகித்தார்.

கலெக்டர் அர்ச்சனா பட்நாயக் தலைமை தாங்கி 2015–16–ம் ஆண்டுக்கான கடன் திட்ட புத்தகத்தை வெளியிட்டார். முதல் பிரதியை கனரா வங்கி பொதுமேலாளர் எஸ்.கிருஷ்ணன், 2–வது புத்தகத்தை கோவை மாவட்ட நபார்டு வங்கி துணை பொதுமேலாளர் செல்வன் ஆகியோர் பெற்றுக்கொண்டனர்.

பின்னர் கலெக்டர் அர்ச்சனா பட்நாயக் கூறியதாவது:–

ரூ.12,150 கோடி கடன்

கோவை மாவட்டத்தில் தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் மற்றும் தனியார் வங்கிகள், கூட்டுறவு வங்கிகள், நபார்டு வங்கிகள் என்று மொத்தம் 741 வங்கிகள் உள்ளன. இந்த வங்கிகள் மூலம் 2015–16–ம் ஆண்டில் ரூ.12 ஆயிரத்து 150 கோடி கடன் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு உள்ளது.

அதில் விவசாயத்துக்கு ரூ.5 ஆயிரத்து 127 கோடியும், சிறு குறு மற்றும் நடுத்தர தொழில்களுக்கு ரூ.5 ஆயிரத்து 28 கோடியும், வீட்டுக்கடன், கல்விக்கடன் உள்பட பிற கடன்களுக்கு ரூ.1,995 கோடியும் வழங்க நிர்ணயிக்கப்பட்டு உள்ளது. இந்த கடன்களை அனைத்து வங்கிகளும் குறிப்பிட்ட காலங்களில் வழங்க வேண்டும்.

இவ்வாறு கலெக்டர் அர்ச்சனா பட்நாயக் தெரிவித்தார்.

அதிகளவில் கடன்

மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் கே.கிருஷ்ணமூர்த்தி கூறுகையில், ‘தமிழகத்தில் கோவை மாவட் டத்தில் தான் அதிகளவில் கடன் வழங்கப்படுகிறது. அதில் இந்த காலாண்டில் மட்டும் ரூ.2 ஆயிரத்து 964 கோடி கடன் வழங்க இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டு இருந்தது. அதில் நிர்ணயிக்கப்பட்ட அளவை தாண்டி ரூ.3 ஆயிரத்து 33 கோடி கடன் வழங்கப்பட்டு உள்ளது’ என்றார்.

இந்த நிகழ்ச்சியில் கடந்த ஆண்டில் நிர்ணயிக்கப்பட்ட அளவை விட கூடுதலாக கடன் வழங்கிய வங்கிகளை கலெக்டர் பாராட்டினார். இதில் அரசு அதிகாரிகள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

தினகரன்

**சம்பா சாகுபடிக்காக கல்லணையில் இருந்து இன்று தண்ணீர் திறப்பு**



தஞ்சை: காவிரி டெல்டா சம்பா சாகுபடிக்காக இன்று காலை கல்லணையிலிருந்து தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். குறுவை சாகுபடிக்காக மேட்டூர் அணை ஜூன்

12ம் தேதி திறக்கப்பட்டு ஜனவரி 28ம் தேதி மூடப்படுவது வழக்கம். ஆனால், அணையில் போதிய தண்ணீர் இல்லாததால் தண்ணீர் திறக்கப்படவில்லை. இதனால் இந்தாண்டு குறுவை சாகுபடி நடக்கவில்லை. இதனிடையே, கடந்த 9ம் தேதி சம்பா சாகுபடிக்காக மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறந்துவிடப்பட்டது. அணை திறக்கப்படும்போது அணையின் நீர்இருப்பு 60.41 டி.எம்.சி.யாக இருந்தது. நீர்மட்டம் 96.51 அடியாக இருந்தது. முதல்கட்டமாக விநாடிக்கு 5 ஆயிரம் கன அடியாக திறக்கப்பட்டு, பின்னர் 13 ஆயிரம் கன அடியாக அதிகரிக்கப்பட்டது.

இந்தநிலையில், மேட்டூர் அணையின் நீர் நேற்று அதிகாலை முக்கொம்பு வந்தது. நேற்று மாலை கல்லணை வந்து சேர்ந்தது. இதையடுத்து இன்று காலை சிறப்பு பூஜைகள் செய்யப்பட்டு கல்லணையிலிருந்து தண்ணீர் திறந்து விடப்படுகிறது. தண்ணீர் திறக்கப்படுவதால் தஞ்சை, திருவாரூர், நாகை, கடலூர், புதுக்கோட்டை மாவட்டங்களில் 12.97 லட்சம் ஏக்கரில் சம்பா சாகுபடி நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதனால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

**வண்டலூரில் 4.65 கோடியில் வண்ணத்துப் பூச்சி அரங்கம்**




சென்னை: வண்டலூர் உயிரியல் பூங்காவில் 4 கோடியில் வண்ணத்து பூச்சி உள்ளரங்கமும், 65 லட்சத்தில் பறவைகள் கூடமும் அமைக்கப்பட்டுகிறது. சென்னை அடுத்த வண்டலூரில் உள்ள அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவில் சிங்கம், புலி, கரடி, யானை, மான்கள் உள்ளிட்ட பல அரிய வகை விலங்குகளும், பறவைகளும் உள்ளன. இவற்றை காண தினமும் ஆயிரக்கணக்கான

இந்நிலையில், வண்டலூர் உயிரியல் பூங்காவில் 4 கோடியில் வண்ணத்து பூச்சி உள்ளரங்கமும், 65 லட்சத்தில் பறவைகள் கூடமும் அமைக்கப்பட்டுள்ளது. இவற்றை வனத்துறை அமைச்சர் ஆனந்தன், கால்நடை பராமரிப்புதுறை அமைச்சர் சின்னையா ஆகியோர் நேற்று காலை பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.இதுகுறித்து அமைச்சர்களிடம் கேட்டபோது, ‘‘பூங்காவில் இரண்டரை ஏக்கர் நிலப்பரப்பில் 4 கோடியில் வண்ணத்து பூச்சி உள்ளரங்கமும், 65 லட்சத்தில் பறவைகள் கூடமும் அமைக்கப்பட்டுள்ளது. வண்ணத்து பூச்சிகள் சுதந்திரமாக சுற்றித்திரிய செடிகொடிகள், உணவு தாவரங்கள் அமைக்கப்பட்டுள்ளது. இதில் இரட்டை பருவம், கூட்டு புழு பருவம், முழு வளர்ச்சி பருவம் என 3 மாதம் இனப்பெருக்கம் முடிந்துள்ளது.

நாள்தோறும் வண்ணத்து பூச்சிகளின் இனப்பெருக்கம் அதிகரித்து வருவதை பார்வையிட்டோம். இதேபோல் பறவைகளுக்கென தனிக்கூடம் அமைக்கப்பட்டுள்ளது. இதில் காக்கடைல், காக்கடூ, கிளிகள் உள்ளிட்ட பறவைகளுக்கு 10 இருப்பிடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் பூங்காவில் கட்டி முடிக்கப்பட்டுள்ள வண்ணத்து பூச்சி உள்ளரங்கம் மற்றும் பறவைகள் கூடத்தை பார்வையாளர்கள் கண்டுகளிப்பதற்காக விரைவில் திறக்கப்படும்'' என்றனர்.

**நிரம்பும் நிலையில் ராமக்காள் ஏரி விவசாயிகள் மகிழ்ச்சி**

தர்மபுரி, : தர்மபுரியில் தற்போது பெய்து வரும் கோடை மழையால் ராமக்காள் ஏரி நிரம்பும் நிலையில் உள்ளது. இந்த ஏரியை நம்பி அப்பகுதியில் விவசாய பணிகள் துரிதமாக நடந்து வருகிறது. தர்மபுரி - கிருஷ்ணகிரி சாலை மதிகோன்பாளையத்தில் ராமாக்காள் ஏரி உள்ளது. சுமார் 265 ஏக்கர் பரப்பளவில் கொண்ட இந்த ஏரியில் ஆண்டு முழுவதும் தண்ணீர் இருந்துகொண்டே இருக்கும். கடந்த சில மாதங்களுக்கு முன் ராமக்காள் ஏரி வறண்டது. இதனால் ஆடு, மாடு, மேய்ச்சல் நிலமாக மாறியது. இந்நிலையில், கடந்த மாதம் மற்றும் அவ்வவ்போது பெய்து வரும் மழையால் ராமக்காள் ஏரிக்கு தண்ணீர் வரத்து அதிகரித்தது.

இதனால், வறண்டு கிடந்த ராமக்காள் ஏரி, தற்போது நிரம்பும் நிலையில் உள்ளது. இந்த ஏரியை நம்பியுள்ள சுமார் 400 ஏக்கர் விவசாய நிலங்களில் சாகுபடி செய்யும் பணியில் விவசாயிகள் துரிதமாக ஈடுபட்டுள்ளனர். இதுகுறித்து விவசாயிகள் கூறுகையில், ராமக்கா ஏரிக்கு வரும் கால்வாய் பகுதிகள், ஆக்கிரமிப்பால் நீர் வரத்து குறைந்து காணப்பட்டது.

தற்போது பெய்து வரும் மழையால் ஏரியில் மழைநீர் தேங்கியுள்ளது.

இதை நம்பி நெல், கரும்பு சாகுபடியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளோம். ஏரியை சுற்றியுள்ள பகுதிகளில் கிணறு, ஆழ்துளை கிணறுகளில் நீர்மட்டம் கிடுகிடுவென உயர்ந்துள்ளது என்றனர்.

**சிக்கன் விலை கிலோ ரூ.125க்கு சரிவு**

கோவை : சிக்கன் விலை தொடர்ந்து சரிந்து வருகிறது. நேற்று தோலுடன் கிலோ ரூ.110க்கும், தோல் நீக்கி ரூ.125க்கும் நிர்ணயிக்கப்பட்டது.

கோவை, திருப்பூர் மாவட்டத்தில் கறிக்கோழி உற்பத்தியாளர்கள் உள்ளனர். இவர்கள் மூலம் தமிழகம் முழுவதும் உள்ள பண்ணைகளில் கறிக்கோழி வளர்க்கப்பட்டுவிற்கப்படுகிறது. தமிழகத்தில் உள்ள சில்லரை விற்பனை நிலையங்களில் விற்க வேண்டிய விலை குறித்து கறிக்கோழி உற்பத்தியாளர்கள் தினசரி விலை நிர்ணயித்து அறிவித்து வருகின்றனர். அதன்படி கடந்த ஜூன் மாதம் கறி கிலோ தோலுடன் கறி ரூ.165, ேதால் நீக்கிய கறி ரூ.190க்கு நிர்ணயிக்கப்பட்டது. பின்னர் ஜூலை மாதத்தில் தோலுடன் கறி ரூ.135, தோல் நீக்கிய கறி ரூ.155 வரை சரிந்தது. இம்மாதத்தில் கடந்த 4ம் தேதி தோலுடன் ரூ.110க்கும், தோல் நீக்கி ரூ.130க்கு சரிந்தது. தொடர்ந்து இதே விலையில் நீடித்து வந்த கறிக்கோழி விலை, நேற்று தோல் நீக்கிய கறி ரூ.125க்கு சரிந்தது. சிக்கன் விலை தொடர்ந்து சரிந்து வருவதால் கறிக்கோழி நுகர்வு அதிகரிக்கும் வாய்ப்புள்ளது.

**திருச்சி மாவட்டத்தில் சம்பா சாகுபடிக்கு விதை, உரம் தயார் அதிகாரி தகவல்**

திருச்சி, : திருச்சி மாவட்டத்தில் சம்பா சாகுபடிக்கான விதை, உரம் போதிய அளவு தயாராக உள்ளதாக கலெக்டர் பழனிசாமி தெரிவித்தார்.திருச்சி மாவட்டத்தில் நடப்பு சம்பா பருவ சாகுபடிக்கான முன்னேற்பாடு குறித்த வேளாண்துறை, வேளாண் பொறியியல் துறை, கூட்டுறவுத் துறை, பொதுப்பணித் துறை, வங்கியாளர் ஆகியோருடனான ஆலோசனை கூட்டம் கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் பழனிசாமி தலைமையில் நேற்று நடைபெற்றது.

கூட்டத்தில் கலெக்டர் பழனிசாமி தெரிவித்ததாவது: நடப்பு ஆண்டு சம்பா சாகுபடிக்காக கடந்த 9.8.2015 மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறக்கப்பட்டுள்ள நிலையில், நமது மாவட்டத்தில் இவ்வாண்டு காவிரி பாசன பகுதிகளில் 36,400 எக்டர், இதர பகுதிகளில் 22,500 எக்டர் என மொத்தம் 58,900 எக்டரில் சம்பா சாகுபடி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. தற்போது, சம்பா சாகுபடிக்கு தேவையான மத்திய கால நெல் ரகங்களின் சான்று பெற்ற விதைகள் 931 மெ.டன் அளவில் அனைத்து வேளாண் விரிவாக்க மையம், தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மற்றும் தனியார் விதை விற்பனையாளர்களிடமும் இருப்பு உள்ளது. மேலும் தேவைக்கேற்ப சான்று விதைகள் மாவட்டத்தில் உள்ள கூட்டுறவு கடன் சங்கங்களிலும், தனியார் விதை விற்பனையாளர்களிடமும் இருப்பு வைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதில் மத்திய கால நெல் ரகங்களான ஆடுதுறை 49, ஆடுதுறை 50, பீபிட்டி-5204, மேம்படுத்தப்பட்ட வெள்ளை பொன்னி, கோ.ஆர்-50 மற்றும் அம்பை-19 விதைகள் 531 மெ.டன் இருப்பு உள்ளது. தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டம் நெல் இயக்கத்தின் கீழ் 10 வருடங்களுக்குள் வெளியிடப்பட்ட ரகங்களான ஆடுதுறை-49, ஆடுதுறை-50 கோ.ஆர்-50 நெல் விதைகள் கிலோவிற்கு ரூ10 வீதம் மான்யத்தில் விநியோகிக்கப்பட்டு வருகிறது.

மேலும், சம்பா சாகுபடிக்கு தேவையான யூரியா 6783 மெ.டன்னும், டிஏபி 1662 மெ.டன்னும், பொட்டாஷ் 2090 மெ.டன்னும் மற்றும் கூட்டுரம் 5974 மெ.டன்னும் மாவட்ட தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மற்றும் தனியார் உரக் கடைகளிலும் போதிய அளவு இருப்பு உள்ளது. நெல் பயிரில் நுண்சத்து பற்றாக்குறையை போக்கி நல்ல மகசூல் தரவல்ல நெல் நுண்சத்து உரம் 20.345 மெ.டன் வேளாண்மை விரிவாக்க மையத்தில் போதிய அளவு இருப்பு வைக்கப்பட்டுள்ளது. மேலும் தேவைக்கேற்ப விதைகள் மற்றும் உரங்கள் தட்டுபாடின்றி வழங்கவும் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. பாசன நீரை சிக்கனமாக பயன்படுத்தி நெல் உற்பத்தி திறனை உயர்த்தும் நோக்கிலும் நடவு ஆட்களின் தட்டுப்பாட்டினை போக்கிடவும் இவ்வாண்டில் தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டத்தின் கீழ் ஒரு எக்டர் இயந்திர நெல் நடவு செய்யும் விவசாயிக்கு 50 சத மான்யமாக ரூ.3000 வீதம் அவரவர் தம் வங்கி கணக்கில் வழங்கப்படவுள்ளது. இத்திட்டத்தில் ஒரு விவசாயி அதிகபட்சமாக இரண்டு எக்டர் நெல் நடவிற்கு மான்யம் பெறலாம். மேலும் விதைகள் மற்றும் உரங்கள் இருப்பு விநியோகம் மற்றும் தேவையினை கண்காணிக்க வேளாண்மை இணை இயக்குநர் அலுவலகத்தில் காலை 10 முதல் 5.45 மணி வரை கட்டுப்பாட்டு அறை செயல்பட்டு வருகிறது. இது தொடர்பான சந்தேகங்களுக்கு 0431-2420554 என்ற தொலைபேசி எண்ணை தொடர்பு கொள்ளலாம் என்றார்.

**மாவட்டத்தில் பரவலாக மழை பெனுகொண்டாபுரத்தில் 42 மில்லி மீட்டர் பதிவு**

கிருஷ்ணகிரி, : கிருஷ்ணகிரி மாவட்டத்தில் நேற்று முன்தினம் காலை முதல் வெயில் வாட்டி வதைத்தது. இதனால் பள்ளி செல்லும் மாணவ, மாணவிகள், பொதுமக்கள் தவிப்பிற்குள்ளாகினர். மேலும் இளநீர், குளிர்பானக்கடைகளில் கூட்டம் காணப்பட்டது. இந்நிலையில் இரவு 10.30 மணியளவில் திடீரென இடி, மின்னலுடன் கன மழை பெய்தது. இதனால் சாலையில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. வாகன ஓட்டிகள் சிரமத்துடன் இயக்கி சென்றனர். கால்வாயில் இருந்து வெளியேறிய கழிவு நீர் தெருக்களில் தேங்கியது.

குறிப்பாக கிருஷ்ணகிரி, போச்சம்பள்ளி, பெனுகொண்டாபுரம், ஊத்தங்கரை சுற்றுவட்டார பகுதியில் நல்ல மழை பெய்தது. இந்த திடீர் மழையால் விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். பெனுகொண்டாபுரம் பகுதியில் கன மழை கொட்டி தீர்த்தது. நேற்று காலை 8 மணி நிலவரப்படி பதிவான மழை அளவு (மில்லி மீட்டரில்) வருமாறு: பெனுகொண்டாபுரம் 42, ஊத்தங்கரை 36.2, போச்சம்பள்ளி 10, கிருஷ்ணகிரி 8.2, ஓசூர் 8, பாரூர் 6.2, நெடுங்கல் 5.4, சூளகிரி 4, தேன்கனிக்கோட்டை 3, மொத்தம் 123 மில்லி மீட்டர் மழை பதிவானது. சராசரியாக மாவட்டம் முழுவதும் 10.25 மில்லி மீட்டர் மழை பதிவாகியுள்ளது.

**வெஞ்சமாங்கூடலூரில் கால்நடை மருத்துவ முகாம் 1,290 ஆடு, மாடுகளுக்கு சிகிச்சை**

அரவக்குறிச்சி : அரவக்குறிச்சி ஒன்றியம் கொளிஞ்சிவாடி வெஞ்சமாங்கூடலூரில் நடந்த கால்நடை பாதுகாப்பு முகாமில் 1,290 கால்நடைகளுக்கு சிகிச்சையளிக்கப்பட்டது. கரூர் மாவட்டம் அரவக்குறிச்சி ஒன்றியம் கொளிஞ்சிவாடி கிராமத்தில் வெஞ்சமாங்கூடலூர் கால்நடை மருந்தகம் சார்பில் சிறப்புகால்நடை பாதுகாப்பு முகாம் நடைபெற்றது. முகாமை கால்நடை பெருக்கம் மற்றும்

அபிவிருத்தி துறை துணை இயக்குநர் பழனிவேல் துவக்கி வைத்து விவசாயிகளிடையே கலந்தாலோசனை நடத்தினார். முகாமில் வெள்ளாடுகள் மற்றும் செம்மறி ஆடுகளுக்கு நோய் தடுப்பூசி போடப்பட்டது. பசு மற்றும் எருமைகளுக்கு கோமாரி நோய்க்கு தடுப்பூசி போடப்பட்டது. மேலும் குடற்புழு நீக்கல், கருவூட்டல், மலடு நீக்கல், சினை பரிசோதனை உள்ளிட்ட சிகிச்சைகள் கால்நடைகளுக்கு இலவசமாக அளிக்கப்பட்டது.

கால்நடை மருத்துவர் நாகராஜன், அரவக்குறிச்சி டாக்டர் ராஜேந்திரன், கால்நடை பராமரிப்பு உதவியாளர் பாலசுரேந்தர், உதவியாளர் கணேசன் உள்ளிட்ட கால்நடை மருத்துவக் குழுவினர் கால்நடைகளுக்கு சிகிச்சையளித்தனர். இம்முகாமில் 1,290 கால்நடைகளுக்கு சிகிச்சையளிக்கப்பட்டது. சிறந்த கலப்பின கிடேரி கன்றுகளுக்கு மாவட்ட கால்நடை பெருக்கம் மற்றும் அபிவிருத்திதுறை துணை இயக்குநர் பழனிவேல் ஊக்கப்பரிசு வழங்கினார். முகாமில் சுற்றுப்பகுதி கிராமத்தை சேர்ந்த விவசாயிகள் தங்கள் கால்நடைகளுடன் கலந்து கொண்டனர்.

அரவக்குறிச்சி : அரவக்குறிச்சி ஒன்றியம் கொளிஞ்சிவாடி வெஞ்சமாங்கூடலூரில் நடந்த கால்நடை பாதுகாப்பு முகாமில் 1,290 கால்நடைகளுக்கு சிகிச்சையளிக்கப்பட்டது. கரூர் மாவட்டம் அரவக்குறிச்சி ஒன்றியம் கொளிஞ்சிவாடி கிராமத்தில் வெஞ்சமாங்கூடலூர் கால்நடை மருந்தகம் சார்பில் சிறப்புகால்நடை பாதுகாப்பு முகாம் நடைபெற்றது. முகாமை கால்நடை பெருக்கம் மற்றும் அபிவிருத்தி துறை துணை இயக்குநர் பழனிவேல் துவக்கி வைத்து விவசாயிகளிடையே கலந்தாலோசனை நடத்தினார். முகாமில் வெள்ளாடுகள் மற்றும் செம்மறி ஆடுகளுக்கு நோய் தடுப்பூசி போடப்பட்டது. பசு மற்றும் எருமைகளுக்கு கோமாரி நோய்க்கு தடுப்பூசி

போடப்பட்டது. மேலும் குடற்புழு நீக்கல், கருவூட்டல், மலடு நீக்கல், சினை பரிசோதனை உள்ளிட்ட சிகிச்சைகள் கால்நடைகளுக்கு இலவசமாக அளிக்கப்பட்டது.

கால்நடை மருத்துவர் நாகராஜன், அரவக்குறிச்சி டாக்டர் ராஜேந்திரன், கால்நடை பராமரிப்பு உதவியாளர் பாலசுரேந்தர், உதவியாளர் கணேசன் உள்ளிட்ட கால்நடை மருத்துவக் குழுவினர் கால்நடைகளுக்கு சிகிச்சையளித்தனர். இம்முகாமில் 1,290 கால்நடைகளுக்கு சிகிச்சையளிக்கப்பட்டது. சிறந்த கலப்பின கிடேரி கன்றுகளுக்கு மாவட்ட கால்நடை பெருக்கம் மற்றும் அபிவிருத்திதுறை துணை இயக்குநர் பழனிவேல் ஊக்கப்பரிசு வழங்கினார். முகாமில் சுற்றுப்பகுதி கிராமத்தை சேர்ந்த விவசாயிகள் தங்கள் கால்நடைகளுடன் கலந்து கொண்டனர்.

அரவக்குறிச்சி : அரவக்குறிச்சி ஒன்றியம் கொளிஞ்சிவாடி வெஞ்சமாங்கூடலூரில் நடந்த கால்நடை பாதுகாப்பு முகாமில் 1,290 கால்நடைகளுக்கு சிகிச்சையளிக்கப்பட்டது. கரூர் மாவட்டம் அரவக்குறிச்சி ஒன்றியம் கொளிஞ்சிவாடி கிராமத்தில் வெஞ்சமாங்கூடலூர் கால்நடை மருந்தகம் சார்பில் சிறப்புகால்நடை பாதுகாப்பு முகாம் நடைபெற்றது. முகாமை கால்நடை பெருக்கம் மற்றும் அபிவிருத்தி துறை துணை இயக்குநர் பழனிவேல் துவக்கி வைத்து விவசாயிகளிடையே கலந்தாலோசனை நடத்தினார். முகாமில் வெள்ளாடுகள் மற்றும் செம்மறி ஆடுகளுக்கு நோய் தடுப்பூசி போடப்பட்டது. பசு மற்றும் எருமைகளுக்கு கோமாரி நோய்க்கு தடுப்பூசி போடப்பட்டது. மேலும் குடற்புழு நீக்கல், கருவூட்டல், மலடு நீக்கல், சினை பரிசோதனை உள்ளிட்ட சிகிச்சைகள் கால்நடைகளுக்கு இலவசமாக அளிக்கப்பட்டது.

கால்நடை மருத்துவர் நாகராஜன், அரவக்குறிச்சி டாக்டர் ராஜேந்திரன்,

கால்நடை பராமரிப்பு உதவியாளர் பாலசுரேந்தர், உதவியாளர் கணேசன் உள்ளிட்ட கால்நடை மருத்துவக் குழுவினர் கால்நடைகளுக்கு சிகிச்சையளித்தனர். இம்முகாமில் 1,290 கால்நடைகளுக்கு சிகிச்சையளிக்கப்பட்டது. சிறந்த கலப்பின கிடேரி கன்றுகளுக்கு மாவட்ட கால்நடை பெருக்கம் மற்றும் அபிவிருத்திதுறை துணை இயக்குநர் பழனிவேல் ஊக்கப்பரிசு வழங்கினார். முகாமில் சுற்றுப்பகுதி கிராமத்தை சேர்ந்த விவசாயிகள் தங்கள் கால்நடைகளுடன் கலந்து கொண்டனர்.

**மங்கைமடத்தில் இயற்கை விவசாய கண்காட்சி**

சீர்காழி : சீர்காழி அருகே மங்கைமடம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் சிதம்பரம் அண்ணாமலை பல்கலைக்கழக வேளாண்மைத்துறை இறுதியாண்டு மாணவர்கள் சார்பில் இயற்கை விவசாயம் குறித்த கண்காட்சி நடைபெற்றது. ஊராட்சி தலைவர் செண்பகம் மகாலிங்கம் தலைமை வகித்தார். வேளாண்மை துணை இயக்குநர்கள் அசோகன், சிவக்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர். தலைமை ஆசிரியர் திருநாவுக்கரசு வரவேற்றார். விழாவில் அண்ணாமலை பல்கலைக்கழக வேளாண்மைத்துறை மாணவர்கள் இயற்கை விவசாயம், எலிகளை கட்டுப்படுத்துதல், மாடித்தோட்டம், ஒருங்கிணைந்த வேளாண்மை பண்ணையம் போன்றவற்றை கண்காட்சியில் தத்துருவமாக அமைத்திருந்தனர். இதனை மாணவ, மாணவிகள், விவசாயிகள் கண்டுகளித்தனர். இதில் அண்ணாமலை பல்கலைக்கழக வேளாண்மை விரிவாக்கத்துறை முனைவர் சுஜெய்வேலு, குணா, பாலவிகாஸ், சபாநாயகம் கலந்து கொண்டனர். முடிவில் தலைமை ஆசிரியர் அண்ணாதுரை நன்றி கூறினார்.

**தோட்டக்கலை விவசாயிகளுக்கு ஆடி முன்பட்ட பயிற்சி**

காரைக்கால் : புதுச்சேரி அரசு வேளாண்துறை சார்பில், தோட்டக்கலை விவசாயிகளுக்கு ஆடி முன்பட்ட பயிற்சி முகாம் நடைபெற்றது. காரைக்கால் மாதூர் வேளாண் அறிவியல் நிலையத்தில் நடைபெற்ற முகாமை, துணை வேளாண் இயக்குனர் கலியமூர்த்தி துவக்கி வைத்தார். வேளாண் அலுவலர் ஜெயந்தி வரவேற்றார். செம்பனார்கோவில் தோட்டக்கலை உதவி இயக்குனர் கணேசன் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு, அனைத்து வகையான நிலங்களிலும் ஆர்வமுடைய விவசாயிகள் தோட்டக்கலை பயிர் சாகுபடி செய்ய முடியும். என்பதையும், அதற்கான வழிமுறைகளையும், குழித்தட்டு நாற்றாங்கால் உற்பத்தி தொழில்நுட்பங்களையும், வீட்டு தோட்டக்கலை காய்கறி சாகுபடி பற்றியும் செய்முறை விளக்கத்துடன் விளக்கினார்.

தொடர்ந்து, புதுச்சேரி பெருந்தலைவர் காமராஜர் வேளாண் அறிவியல் நிலையத்தின் தொழில்நுட்ப வல்லுநர் முனைவர் விஜயகுமார் பயிர்களில் பூச்சிகளின் தாக்கம், அதை பாதுகாத்தல் குறித்து விளக்கினார். மேலும், இயற்கைமுறை சாகுபடி குறிப்புகள், பயிர் பாதுகாப்பு குறித்தும் விளக்கினார். புதுச்சேரி தேசிய தோட்டக்கலை இயக்கத்தின் தோட்டக்காலை அலுவலர் கதிரவன், தோட்டக்கலை இயக்கத்தின் திட்டங்கள் குறித்து விளக்கினார். விவசாயிகளுக்கு இலவச காய்கறி விதைகள் வழங்கப்பட்டது. முன்னதாக, காரைக்கால் அத்திப்படுகை கிராமத்தில் நடைபெற்ற ஆடி முன்பட்ட பயிற்சி முகாமில், சிக்கல் வேளாண் அற்வியல் நிலையத்தின் தொழில் நுட்ப வல்லுநர் முனைவர் தமிழ்செல்வன், காய்கறி பயிர்களில் மேம்படுத்தப்பட்ட தொழில்நுட்பங்களையும், தரமான தென்னங்கன்றுகளின் உற்பத்தி குறித்தும் விளக்கி கூறினார்.

**நாகையில் சம்பா சாகுபடி ஏற்பாடு தீவிரம் கோட்ட அளவில் விவசாயிகள் குறைதீர் கூட்டம் குறைந்த வாடகையில் வேளாண் இயந்திரங்கள் வழங்க நடவடிக்கை**

நாகை : நாகை மாவட்டத்தில் சம்பா சாகுபடிக்கான ஏற்பாடுகள் தீவிரமாக நடந்து வருகின்றன. நாகை மாவட்டத்தில் சம்பா சாகுபடிக்கான நீர் பாசன முன்னேற்பாடுகள் குறித்த ஆய்வு கூட்டம் நேற்று நடைபெற்றது. கூட்டத்திற்கு தலைமை வகித்து கலெக்டர் பழனிச்சாமி பேசியதாவது: டெல்டா மாவட்டங்களில் நாகை மாவட்டம் முன்னிலை மாவட்டமாக திகழ்கிறது. மாவட்டத்தில் குறுவை சாகுபடி பருவத்தில் அனைத்து வேளாண். இடுபொருட்களும் விவசாயிகளுக்கு சரியான முறையிலும், உரிய நேரத்திலும் வழங்கப்பட்டது. இதனால் கடந்த ஆண்டில் சாகுபடி செய்யப்பட்ட 71,575 ஏக்கரை விஞ்சி நடப்பாண்டில் 87,392 ஏக்கரில் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. கல்லணையிலிருந்து இன்று தண்ணீர் விடப்பட உள்ளது. கல்லணையிலிருந்து திறந்து விடப்படும் தண்ணீர் பாசன கண்மாய்கள், ஏரிகளில் நிரப்பப்பட வேண்டியதையும், பாசன நீர் முறையாக பகிர்ந்தளிக்கப்படுவதையும் அந்தந்த பகுதியை சேர்ந்த பொதுப்பணித்துறை, வருவாய்த்துறை, பஞ்சாயத்து துறை அலுவலர்கள் கண்காணித்து ஆய்வு செய்ய வேண்டும்.

இதன் தினசரி தகவல்களை மாவட்ட நிர்வாகத்திற்கு தெரியப்படுத்த வேண்டும். இதற்காக வட்டார அளவில் ஊராட்சி மன்ற தலைவர்களுக்கு

கூட்டம் நடத்தி தகவல்களை தெரிவிக்க வேண்டும். வேளாண். துறை அலுவலர்கள் தண்ணீர் பாய்வதை கண்காணித்து அதில் பிரச்னை இருந்தால் பொதுப்பணித்துறை அலுவலர்களுக்கு தெரிவிக்க வேண்டும். பொதுப்பணித்துறை அலுவலர்கள் பிரச்னையை தீர்க்க உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். கோட்ட அளவில் விவசாயிகள் பாசன மற்றும் இடுபொருட்கள் குறித்த பிரச்னைகளை தீர்வு செய்ய மாதந்தோறும் முதலாவது செவ்வாய்க்கிழமை அன்று முற்பகலில் நாகை வருவாய் கோட்டத்திலும், பிற்பகலில் மயிலாடுதுறை வருவாய் கோட்டத்திலும், ஆர்.டி.ஓ.க்கள் தலைமையில் விவசாயிகள் குறைதீர் கூட்டம் நடத்த வேண்டும். இதில் சம்பந்தப்பட்ட அலுவலர்கள் கண்டிப்பாக கலந்து கொண்டு விவசாயிகளுக்கு ஆலோசனை கூற வேண்டும். இந்த கூட்டம் வருகிற 18ம் தேதி முதல் மேட்டூர் அணையில் நீர்வரத்து குறையும் நாள் வரை நடைபெற வேண்டும்.

சம்பா, தாளடி பருவத்திற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள 3.25 லட்சம் ஏக்கரை எட்ட உரிய நடவடிக்கையும், அதிகபட்ச உற்பத்தியை அடைய தேவையான முன்னேற்பாடு பணிகளை செய்ய வேண்டும். காவிரி டெல்டா மாவட்டங்களில் நாகை மாவட்டத்தில் வெளி மாவட்டங்களிலிருந்து வேளாண். பொறியியல் துறை மூலம் டிராக்டர்கள், நேரடி நெல் விதைப்பு கருவிகள், லேசர் சமன்படுத்தும் இயந்திரங்கள், நடவு இயந்திரங்களை வரவழைத்து விவசாயிகளுக்கு குறைந்த வாடகையில் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் சம்பா சாகுபடியை தீவிர முறையில் செயல்படுத்தவும், விவசாயி கூலித் தொழிலாளர்கள் பற்றாக்குறையை சமாளிக்கவும், உற்பத்தியை அதிகரிக்கவும் வசதியாக இருக்கும். மேட்டூர் அணையிலிருந்து வரும் தண்ணீரை முறை வைத்து அனைத்து பாசன பகுதிகளுக்கும் உரிய

நேரத்தில் சென்றடைய பொதுப்பணித்துறை தக்க முறையில் பணியாற்ற வேண்டும். இவ்வாறு கலெக்டர் பேசினார். கூட்டத்தில் டி.ஆர்.ஓ. பெஞ்சமின்பாபு, வேளாண் இணை இயக்குனர் மயில்வாகனன் மற்றும் அனைத்து துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**பெரம்பலூர் மாவட்டத்தில் சின்ன வெங்காயம் விைல வீழ்ச்சி உச்சத்தில் விதை விலை விவசாயிகள் மகிழ்ச்சி**

பெரம்பலூர் : பெரம்பலூர் மாவட்டத்தில் சின்ன வெங்காய விைல குறைந்து வரும் நிலையில், விதை வெங்காய விலை அதிகரித்திருப்பது விவசாயிகளிடையே மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. பெரம்பலூர் மாவட்டத்தில் தமிழகத்திலேயே அதிக அளவில் சின்னவெங்காயம் சாகுபடி செய்யப்படுகிறது. இதனால் கடந்த 10 ஆண்டுகளாக பெரம்பலூர் மாவட்டம் மாநில அளவில் தொடர்ந்து முதலிடத்தைத் தக்க வைத்து வருகிறது. இங்கு நடப்பாண்டு 6,432 ஹெக்டேரில் அதாவது 15,887 ஏக்கரில் சின்னவெங்காயம் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. அறுவடை செய்த வெங்காயத்தை விவசாயிகள் வயல்களிலேயே பட்டறை அமைத்துப் பாதுகாப்பது வழக்கம். சுற்று வட்டார வியாபாரிகள் வயல்களுக்கே வந்து கொள்முதல் செய்து வந்தனர். இதற்கு மாற்றாக மாவட்ட நிர்வாகம் செட்டிக்குளத்தில் வெங்காயத்தை ஏலத்தின் மூலம் விற்பனை செய்ய ஏற்பாடு செய்தது. இங்கு ஒவ்வொரு வாரமும் சின்ன வெங்காயம் ஏலம் நடைபெற்று வருகிறது. பட்டறை அமைக்கும் முறை தற்போது சிறிதளவு குறைந்திருக்கிறது. இருப்பினும் விதை வெங்காயத்தை பாதுகாக்க பட்டறை தொடர்ந்து அமைக்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில் கர்நாடகா மாநிலம் மைசூரிலிருந்தும், தமிழகத்தில்

கோவை, பல்லடம், பொள்ளாச்சி, மதுரை, நெல்லை, காரமடை உள்ளிட்ட பகுதிகளில் இருந்து தற்போது சின்னவெங்காயம் இறக்குமதி செய்யப்பட்டு வருகிறது. இதனால் கடந்த மாதம் பெரம்பலூர் உழவர்சந்தையில் புதிய ரக வெங்காயம் கிலோ ரூ.50 வரை விற்கப்பட்டு வந்த நிலையில், படிப்படியாகக் குறைந்து தற்போது கிலோ ரூ.32க்கு விற்கப்படுகிறது. அதேநேரம் விதை வெங்காயம் கடந்த ஆண்டு அதிகபட்சமாக கிலோ ரூ.25க்கு விற்கப்பட்ட நிலையில் தற்போது, அறுவடை செய்து ஐந்தாறு மாதமாகிய பழைய விதை வெங்காயம் ஒன்றரை மடங்கு அதிகரித்து கிலோ ரூ.60க்கு விற்கப்படுகிறது. இது வெங்காய விவசாயிகள் எதிர்பார்க்காத ஒன்றாகும். புதிய வெங்காயம் விலைவீழ்ச்சி கண்டு வரும் நிலையில், பழசுக்கு மவுசு உச்சத்தில் உள்ளது குறிப்பிடத்தக்கது. அதோடு கடந்த ஆண்டைக் காட்டிலும் பெரம்பலூர் மாவட்டத்தில் வெங்காய சாகுபடி பரப்பும் நடப்பாண்டு ஆயிரம் ஏக்கர் அதிகரித்திருப்பதாக வேளாண்மைத் துறையினர் தெரிவித்துள்ளனர்.

**சம்பா சாகுபடிக்கு தட்டுப்பாடின்றி உரம் கிடைக்க நடவடிக்கை மாவட்ட ஊராட்சி கூட்டத்தில் வலியுறுத்தல்**

தஞ்சை : சம்பா சாகுபடிக்கு உரம் தட்டுப்பாடின்றி கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென மாவட்ட ஊராட்சி கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது. தஞ்சையில் மாவட்ட ஊராட்சி கூட்டம் தலைவர் அமுதாராணி ரவிச்சந்திரன் தலைமையில் நடந்தது. கூட்டத்தில் மணலூர் சுந்தர்ராஜன் பேசும்போது, தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளில் செயல்முறை கட்டணத்தை ரத்து செய்ய வேண்டும். செயல்முறை கட்டணமாக பெருந்தொகை வசூல் செய்யப்படுவதால் கடன் பெறுபவர்கள் பெரும் பாதிப்புக்குள்ளாகின்றனர். சம்பா சாகுபடிக்கு மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. இதனால் விவசாயிகளுக்கு உரம் தட்டுபாடின்றி கிடைக்க நடவடிக்கை எடுக்க

வேண்டும் என்றார். மேலும் கூட்டத்தில் பட்டுக்கோட்டை, பேராவூரணி பகுதிகளில் கூடுதல் நெல் கொள்முதல் நிலையம் இல்லாததால் விவசாயிகள் கோடை பருவத்தில் சாகுபடி செய்த நெல்லை விற்க முடியாமல் தவிக்கின்றனர். எனவே அப்பகுதிகளில் நிரந்தரமாக நெல் கொள்முதல் நிலையம் அமைக்க வேண்டுமென வலியுறுத்தப்பட்டது.

**காய்கறி, பழங்களில் நச்சுத்தன்மை மாணவ, மாணவிகள் சார்பில் விழிப்புணர்வு மனித சங்கிலி**

பாவூர்சத்திரம், : சமீபகாலமாக காய்கறி உற்பத்தியை பெருக்குவதற்காக நவீன ரசாயன உரங்கள் மற்றும் பூச்சிக்கொல்லி மருந்துகளை பரிந்துரைக்கப்படும் அளவை விட அதிகமாக பயன்படுத்துவதால் அதன் நச்சுத்தன்மை காய்கறிகளிலும், பழங்களிலும் பரவி நாம் உண்ணும் உணவே நஞ்சாக மாறுகிறது.இது குறித்து, வேளாண்மை துறை சார்பில் விவசாயிகளுக்கும் பொதுமக்களுக்கும் விழிப்புணர்வை ஏற்படுத்த பாவூர்சத்திரம் த .பி.சொ. அரசு ஆண்கள் மேல்நிலைபள்ளி மற்றும் அவ்வையார் அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளிகளில் நடந்த விழிப்புணர்வு மனித சங்கிலி நிகழ்ச்சிக்கு கலெக்டர் கருணாகரன் தலைமை வகித்து தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் கீழப்பாவூர் ஒன்றிய தலைவர் செல்வமோகன்தாஸ் பாண்டியன், கலெக்டரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) பெருமாள், மாவட்ட கவுன்சிலர்கள் சேர்மப்பாண்டி, முருகேசன், கல்லூரணி பஞ். தலைவர் ராமசாமி என்ற தமிழ்ச்செல்வன், சமக மாவட்ட செயலாளர் அதியமான், யூனியன் கவுன்சிலர்கள் ராஜசேகரபாண்டியன், ரமேஷ், சுப்பிரமணியன், தோட்டகலை உதவி இயக்குனர் ஜெயபாரதிமாலதி, பாவூர்சத்திரம் வேளாண்மை உதவி இயக்குனர் நல்லமுத்துராஜா, வேளாண்மை விற்பனைகுழுஅலுவலர் முகுந்தாதேவி, கிள்ளிகுளம் வேளாண்மை கல்லூரி மாணவிகள், பாவூர்சத்திரம் ஒழுங்குமுறை விற்பனைக்கூட

கண்காணிப்பாளர் (பொ) ராஜசேகர், வருவாய் ஆய்வாளர் சிவன்பெருமாள், மற்றும் பள்ளி தலைமையாசிரியர்கள், ஆசிரியர், ஆசிரியைகள் கலந்து கொண்டனர்.

தி இந்து
தமிழால் இணைவோம்

**சீனாவில் இரட்டைத் தலை நாகம்: பாதுகாக்கும் முயற்சிகள் தீவிரம்; பாம்பு நிபுணர்களுக்கு அழைப்பு_**



சீனாவில் உள்ள மிருகக்காட்சி சாலை ஒன்று, இரட்டைத் தலை நாகம் ஒன்றை தத்தெடுத்துள்ளது. பிறந்து 15 நாட்கள் ஆன இந்தப் பாம்பை உயிருடன் வைத்திருக்க, உலகெங்கிலும் உள்ள பாம்பு நிபுணர்களை சீனா துணைக்கு அழைத்துள்ளது.

சீனாவில் உள்ள பாம்புப் பண்ணை ஒன்றில் இந்தப் பாம்பு பிறந்தது. பிறந்த உடனே அது நான்னிங் நகரத்தில் உள்ள மிருகக்காட்சி சாலையிடம் ஒப்படைக்கப்பட்டது. 20 சென்டிமீட்டர் நீளம் கொண்ட இந்தப் பாம்புக்கு இரண்டு மூளைகள் உள்ளன. ஆனால் ஒரே ஒரு ஜீரண மண்டலம்தான் உள்ளது.

பொதுவாக ஒரு நாகப் பாம்பு பிறந்து இவ்வளவு நாட்களில் சுமார் 65 கிராம் எடையுடன் இருக்கும். ஆனால் இந்தப் பாம்போ 50 கிராம் எடையுடன் இருக்கிறது. முட்டை அடைகாக்கப்பட்ட போது ஏற்பட்ட தட்பவெப்ப மாற்றங்களால், அதன் மரபணுக்களில் ஏதேனும் மாற்றங்கள் நிகழ்ந்து, அதன் காரணமாக இவ்வாறு இரட்டைத் தலையுடன் பிறந்திருக்கலாம் என்று கூறப்பட்டுள்ளது.

பாம்பின் ஒரு தலை வலது பக்கம் செல்ல முயற்சிக்க, இன்னொரு தலையோ இடது பக்கம் செல்ல முயற்சிக்கிறது. அந்த இடைவிடாத குழப்பம் அந்தப் பாம்புக்கு பாதிப்பை ஏற்படுத்துகிறது. ஒரு வாரத்துக்கு முன்பாக இந்தப் பாம்பு அதன் சட்டையை உரித்தது. ஆனால் எதையும் உண்பதற்கு மறுக்கிறது. எனினும், மிருகக்காட்சி பணியாளர்கள் அதற்கு செயற்கை முறையில் உணவு அளித்துக் கொண்டிருக்கின்றனர். ஆனால் இவ்வாறு நீண்ட நாளுக்கு உணவு அளிக்க முடியாது. எனவே, இந்தப் பாம்பை உயிருடன் வைத்திருக்க, உலகம் முழுவதிலும் உள்ள பாம்பு நிபுணர்களின் உதவியை சீனா நாடியுள்ளது.